
# தமிழரசு

16.8.1995 ரூ.3



எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் : 1995


யாதும் ஊரே யாவரும் கேளிர் !



நிகழ்ச்சிகளில் சில....

திரு. ஆர்.எஸ். மனோகர் - நேஷனல் தியேட்டர்ஸ் - 'திருநாவுக்கரசர்' நாடகம்.

பதினாறு கவனக நினைவாற்றல் நிகழ்ச்சி: திருக்குறள் இரா. கனகசுப்புரத்தினம்



# இந்த இதழில்...


விடுதலை நாள் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை ..................... 2

சுகந்தரும் சுதந்தரம்
நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை ..................... 13

சென்னையில் தெற்காசிய விளையாட்டுப் போட்டி ..................... 14

'கான்வென்டில்' சேரும் தொட்டில் குழந்தைகள் ..................... 17

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மகாவீரர் சிற்பம் ..................... 19

காஞ்சிப் பெரியவர் விழா: மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை ..................... 20

பெருந்தலைவர் காமராஜர் வாரிசுகளுக்கு உதவி ..................... 24

காயிதெமில்லத் நூற்றாண்டு விழா
புதுக்கோட்டை மாவட்டம் ..................... 26


பெரியாறு வைகை-பேரணை இணைப்புக் கால்வாய்த் திட்டத் தொடக்க விழா ..................... 29

மாணவர் பக்கம் ..................... 32

கணிணிக்கு ஏற்ற தமிழ்
—திரு சுஜாதா ..................... 34

பொது விஞ்ஞானம்
—திரு முத்துக்கருப்பன் துணைவேந்தர் ..................... 42

நாமக்கல் கவிஞர்
கவிஞர் பொன்னடியான் ..................... 45

## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

'ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு
ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.' (25)

ஐந்து புலன்களாலாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்கு, வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்.


# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

ஆடித் திங்கள் : 31

மலர்: 26 இதழ்: 4

16.8.1995

விலை ரூபாய்: 3



# "மகளிர் உரிமைகளைப் பெற்றுத் தருவதில் உலகம் முழுமைக்குமே தமிழகம் முன்னோடியாக விளங்குகின்றது!"

## விடுதலைநாள் உரையில் மாண்புமிகு முதலமைச்சர் பெருமிதம்


நமது தாய்த் திருநாடு - பாரத மணித் திருநாடு, அந்நியரின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கிய நன்னாள் இந்நாள். இந்தியத்- தேசிய வரலாற்றில், தேசிய நீரோட்டத்துடன் கலந்து, நாம் அனைவரும் இந்தியர்- ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள், என்கின்ற உணர்வை ஊட்டி வளர்த்து, தேசிய நீரோட்டத்துடன் இணைந்து, இந்திய விடுதலை வரலாற்றில், தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்ற, தியாக பூமி தமிழகம் ஆகும். அன்று கிளர்ந்தெழுந்த விடுதலை உணர்வும், ஒருமைப்பாட்டு உணர்வும் இன்றும் தமிழக மக்கள் மனங்களிலே, பொங்கி எழுகின்றது என்றால் அது மிகையாகாது. "வேற்றுமையில் ஒற்றுமை காண்கின்ற" ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்தான், இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் நாம் அனைவரும் என்பதை, எண்ணி மகிழ்கின்ற இனிய திருநாள் இந்நன்னாள்.


சுதந்திரக் காற்றை நாம் சுவாசிக்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் உயிர் மூச்சை அர்ப்பணித்த, தியாக சீலர்களின் அருந் தியாகங்களை நினைவுகூர்ந்து, நமது நன்றிக்கடனை அவர்களுக்கு உரித்தாக்கும் நல்ல நாள்- இந்நாள்.



இந்த நாட்டின் விடுதலைக்காகத் தங்களது உயிரையும், உடைமைகளையும் அர்ப்பணித்த, தியாக சீலர்களின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுமென்றால், இந்தப் பரந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும், அடிப்படை வசதிகளான, உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை நாம் பெற்றுத் தந்தாக வேண்டும். அந்த உணர்வுடன்தான் உங்கள் அன்பு அன்னையின் ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக, ஏழை எளிய மக்கள் வாழ்வில் வளம் பெறுவதற்கும் ஏற்றம் பெறுவதற்கும், நல்லபல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எங்கே அமைதி கொலுவீற்றிருக்கிறதோ, அங்கேதான் வளர்ச்சி அரங்கேறும். இது சரித்திரம் காட்டுகின்ற உண்மை. எனவேதான், ஒரு காலத்தில் இருள் போலச்





ஓட்டை சொல்லும் செய்தி

சூழ்ந்திருந்த ஆயுதக் கலாச்சாரத்திலிருந்து, தமிழகத்தை மீட்டு, மீண்டும் அமைதிப் பூங்காவாக மாற்றி, நிலைத்த வளர்ச்சிக்கு வித்திட்டோம். மக்கள் நலனை மட்டுமே மனதில் முன்நிறுத்தி, தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகளைத் துணிவுடன் எதிர்கொண்டதால்தான், இன்று பல பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற் பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

சமூகநலத் திட்டங்கள், நம் மாநிலத்தில் ஒரு உறுதியான ஈடுபாட்டுடன் செயல் படுத்தப்பட்டதால், குழந்தைகளின் இறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்துள்ளது. குழந்தைகளின் ஊட்டச் சத்து, கூடியுள்ளது. கருவுற்ற தாய்மார்கள், மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் நலம், பொதுவாகப் பெருகியுள்ளது. பள்ளியில் பயிலும், மாணவ மாணவியர்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப் படுகின்றது. அரசுத் தொட்டிலில் இடப்பட்ட குழந்தைகள் அன்போடும் ஆதரவோடும் வளர்க்கப்பட்டு மற்றவர்களைப் போல் சீராட்டிப் பாராட்டி 'கான்வென்ட்' பள்ளி களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எங்கள் அரசு இதயமுள்ள ஒரு அரசு என்பதை, இது எடுத்துக்காட்டும் என்று நம்புகிறேன். பெண் சிசுவதை, வரதட்சணைப் பிரச்சினை போன்ற புரையோடிப்போன சமுதாயக் கொடுமை களுக்கு, ஒரு நிரந்தரத் தீர்வு காண நாம் மேற்கொண்ட முயற்சிகள், இன்று நல்ல பலன்களை அளித்து வருகின்றன. தொட்டில் குழந்தைகள் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம், பள்ளிக் குழந்தைகள் மருத்துவ நல முகாம்கள் ஆகியவை சமுதாயத்தில் ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளன. இவற்றுடன், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்தின் சிறப்பான செயல்பாடு, துணைக் கண்டத்தின் மற்ற மாநிலங்களின் கவனத்தை, ஏன் உலக நாடுகள் பலவற்றின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

சமூகநலத் திட்டங்களில், நாம் செய்கின்ற முதலீடுகளை விழலுக்கு இரைத்த நீர் என்று ஒரு காலத்தில் வர்ணித்தவர்கள், இன்று "அது தான் விடியலுக்கு வழி" என்று, நம் திட்டங்களை அப்படியே கடைப்பிடிக்க முன்வந்துள்ளார்கள். நாம் நடந்து வந்த பாதை, எத்தனைச் சரியானது என்பதை, நாம் பெற்ற வெற்றிகள், விளக்கிக்கொண்டிருக் கின்றன என்றால், அது மிகையாகாது.

சமூகநலத் திட்டங்களையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும் தனி மனித முன்னேற்றத் திட்டங்களையும், செயல்படுத்தி வரும் அதே நேரத்தில், தமிழகத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு,



**சுதந்திர தின விழாவின்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், உடல் ஊனமுற்றோர் நலனுக்காகச் சீரியமுறையில் பணியாற்றிய வர்களுக்கு விருதுகளை வழங்கினார்கள்.**

சீரிய தொழில் துறை முன்னேற்றத்திற்கும், எங்கள் ஆட்சியில் ஒரு புதிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 'புதிய தொழில் கொள்கையை' ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் அறிவித்ததோடு, தாராள மயமாக்கும் மற்றும் தனியார் மயமாக்கும் கொள்கையை முழுமையாகப் பயன்படுத்தி பெரிய முதலீடுகளில் அமைந்த பெரிய தொழில்களைத் தொடங்கி அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம்.

குறிப்பாக, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டம், வட சென்னை அனல் மின் நிலையத்தின், இரண்டாம் கட்டத் திட்டம் Sterlite நிறுவனத்தாரின் தாமிர உருக்குத் தொழிற்சாலை மற்றும் Thapar Dupont நிறுவனத்தாரின் Nylon 6.6 செயற்கை இழை தயாரிக்கும் தொழிற்சாலை போன்றவை தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விரைவில் Ford கம்பெனியின் கூட்டோடு, தனியார் துறையில், Car தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினையும் தமிழகத்தில் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. TIDCO நிறுவனம், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 25 பெரிய தொழிற்சாலைகளை, 20,000 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கி உள்ளது ஒரு மகத்தான சாதனையாகும். இவ்வாறு, கடந்த நான்கு ஆண்டுகளில், 76,628 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டில், பல பெரிய தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரதட்சணை போன்ற பல்வேறு சமுதாயக் கொடுமைகளில் இருந்து பெண்களைக் காப்பாற்றுவதற்கும் சட்டப்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கும் தமிழகத்தில் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் துவக்கியுள்ளோம். மகளிர் உரிமைகளைப் பெற்றுத் தரும் மகத்தான பணியில், இந்திய நாட்டிற்கே ஏன், உலகம் முழுமைக்குமே, தமிழகம்

முன்னோடியாக விளங்கி வருகின்றது என்பதை, மிக்க பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர் களுக்கும், நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கும், கடந்த நான்கு ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளை முன்னிட்டு சுமார் 65 கோடி ரூபாய் செலவில், ஒரு கோடியே 20 இலட்சம் பேருக்கு இலவசமாக வேட்டி சேலை வழங்கி வருவது உங்கள் அன்பு அன்னையின் ஆட்சியில்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆண்டொன்றுக்கு 1000 கோடி ரூபாய்க்கு மானியச் சுமையைக் கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு இடையேயும் ஏற்றுக் கொண்டு, விவசாயிகளுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கி வருகின்றோம். இந்த உன்னதத் திட்டம், இந்த ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களது அரசின் முயற்சியால், உலக வங்கியின் நிதி உதவியோடு, சென்னை நகருக்குக் குடிநீர் வழங்க புதிய வீராணம் திட்டத்திற்கான பணிகள் தொடங்கப் பட்டுள்ளன. அதேபோல், கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப் பட்டு, கிருஷ்ணா நீர் சென்னைக்குக் கொண்டு வரப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையில், தமிழகம் பின்தங்கியிருந்த நிலையை மாற்றி, இன்று விளையாட்டுத் துறைக்குப் புதிய ஆக்கத் தையும், ஊக்கத்தையும் கொடுத்ததோடு, வரும் டிசம்பர் மாதத்தில் தெற்கு ஆசிய நாடுகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளை மிகப் பிரம்மாண்டமான முறையில் சென்னையில் நடத்த எங்கள் அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதற்காகப் புதிய விளையாட்டு அரங்கங்களும், விளையாட்டு மைதானங் களும் நீச்சல் குளங்களும் விளையாட்டு வீரர்கள் தங்க விளையாட்டுக் கிராமம் ஒன்றும் 240 கோடி ரூபாய் செலவில், எங்கள் அரசு உருவாக்கி வருகின்றது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நான் உண்மை யிலேயே மிக்க மன நிறைவு அடைகிறேன்.

தொன்மையும், புராதனச் சிறப்பும் வாய்ந்த, தமிழகத் திருக்கோயில்களைப் பராமரிப்பதில், எங்கள் ஆட்சி காட்டி வருகின்ற ஈடுபாட்டைத் தமிழக மக்கள் மறக்க மாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்பு கிறேன். ஆயிரக்கணக்கான திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு விழா நடைபெற்றுவரும் அதே நேரத்தில், எல்லாக் கோயில்களிலும், அனுதினமும் விளக்கு எரிகின்ற, ஒரு திட்டத்தையும் தீட்டி, ஒரு கால பூஜையாவது அவற்றில் நடைபெற வழி வகுத்தது உங்கள் அன்பு அன்னையின் அரசுதான் என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு, இதே கோட்டைக் கொத்தளத்தில் இருந்து, நான் உரையாற்றும்போது, தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனக் குடியிருப்புகளுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் 125 கோடி ரூபாய் செலவில் 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் செய்து தரப்படும் என்று குறிப்பிட்டிருந்தேன். பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெருவிளக்கு, இணைப்புச் சாலைகள், மயான வசதி, மற்றும் மயானப் பாதை வசதி ஆகிய ஐந்து அடிப்படை வசதிகளை எல்லா ஆதி திராவிடக் குடியிருப்புகளுக்கும், ஏற்பாடு செய்து தருவதோடு, ஆதிதிராவிட மக்களுக்கு, இலவச வீட்டுமனைப் பட்டாக்களும், போர்க்கால அடிப்படையில் வழங்கப்படும் என்றும் உறுதி கூறியிருந்தேன்.

**நமக்குச் சுதந்தர இந்தியாவைப் பெற்றுத் தருவதற்காகத் தங்கள் இன்னுயிரைக் காணிக்கையாக்கிய தியாக தீபங்களுக்கு அஞ்சலி செலுத்துவது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.**

**—டாக்டர் எம்.ஜி.ஆர்.**

சென்ற ஆண்டு அறிவித்த திட்டத்தின்படி, இதுவரை கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 8 ஆயிரம் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள், இலவசமாக வழங்கப் பட்டுள்ளன. 2,807 ஆதிதிராவிடக் குடியிருப்பு களுக்கு மயானப்பாதை வசதியும், 2,422 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதியும், செய்துதரப்பட்டுள்ளது. 1,730 குடியிருப்புகள், தெரு விளக்கு வசதியைப் பெற்றுள்ளன. இலட்சத்து 8 ஆயிரம் குடிசை களுக்கு இலவச மின் விளக்கு வசதியும் செய்துதரப்பட்டுள்ளது.

1996-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் எல்லா ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கும் எல்லா அடிப்படை வசதிகளும் 5 இலட்சம் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்படும் விதத்தில் அரசு இயந்திரம் முடுக்கிவிடப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்டை நாட்டிலே ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் பிரச்சினையால் எழுந்துள்ள பாதகமான சூழ்நிலையினால் நமது தமிழகத்து மீனவர்களின் வாழ்க்கையில் ஒரு தேவையற்ற பிரச்சினை ஏற்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாகத் தமிழக மீனவர்களின் பிரச்சினைகளை, அணுகி ஆராய்ந்து அவர்தம் துயர்துடைக்க நல்ல பல திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. ஆனால், நமது அப்பாவி மீனவர்கள் இலங்கைக் கப்பற்படையின் அத்துமீறல்களுக்கு அடிக்கடி பலியாகி வருகிறார்கள்.

சமீபத்தில் ஹெலிகாப்டர் விமானத் திலிருந்து ஒன்றுமறியாத தமிழக மீனவர்கள் மீது குண்டு வீசித் தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள். அன்றொரு நாள் கச்சத் தீவைத் தாரை வார்க்காமல் இருந்திருந்தால் இன்று தமிழக மீனவர்களுக்கு இத்தகைய அவல நிலை நிச்சயம் ஏற்பட்டிருக்காது. பல முறை மத்திய அரசையும் பாரதப் பிரதமரை யும் கடிதம் மூலமாகவும் நேரிலும் இந்தக் கொடுமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டும் இதுவரை நிரந் தரத் தீர்வு கிடைக்கவில்லை.

மீனவப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையாக மாறிவிட்ட இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

60 வயதைக் கடந்த மீனவப் பெருங்குடி மக்களின் நலன் காக்க மாதம் ஒன்றுக்கு 160 ரூபாய் ஓய்வூதியம் வழங்கும் புதிய திட்டம் ஒன்றைத் தமிழக அரசு விரைவில் செயல் படுத்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் இத் திட்டத்தின் மூலம், 15,000க்கும் மேற்பட்ட நலிவடைந்த மீனவப் பெருங்குடி மக்கள் தொடக்க நிலையிலேயே பயன் அடைந்திருக் கிறார்கள் என்பதையும், இத்திட்டம் விரைவில் விரிவுபடுத்தப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த நான்காண்டுக் காலத்தில் பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைத்து ஏழை எளிய மக்கள் அனைவரும், குறைந்த விலையில் அத்தியாவசியப் பண்டங்களைப் பெறுகிற நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு வருமான வரம்பு எதுவும் இன்றி, எல்லாக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது.

கிராமப் புறங்களில் வசிக்கும் எனது அன்பிற்குரிய தாய்மார்கள் மற்றும்

**மக்கள் தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாடு அமைத்துக்கொண்டு எல்லாவற்றிலும் சுயநலத்தைத் துறந்து நடப்பதையே சுதந்தர ஆட்சி அல்லது மக்களாட்சி என்கிறோம்.**

**—காந்தியடிகள்**

சகோதரிகள் எல்லா அத்தியாவசியப் பண்டங்களையும் பெற, பல மைல் தூரம் நடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதைக் கருத்தில் கொண்டு, 500 குடும்ப அட்டைகளுக்கும் அதிகமாக உள்ள கடைகளைப் பிரிக்க ஆணையிட்டுள்ளேன். இந்தப் புதிய கிளைக்கடைகள் அந்தந்தக் கிராமங்களிலே வசிக்கும் மகளிரைக் கொண்டே நடத்தப்படுகின்ற புதிய திட்டம் ஒன்று எனது ஆணையின் பேரில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதையும் மிக்க மிகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புறங் களில் வாழும் தாய்மார்கள் மற்றும் சகோதரிகள் இத்திட்டத்தினால் பயன் பெறுவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

வளர்ந்துவரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் நாட்டு நடப்புகளும் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்குச் சென்றடையவேண்டும் என்கின்ற எண்ணத்துடனும் ஏழை எளிய மக்களும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதற்காகவும் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய் செலவில் 4000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் உள்ள 12,500 ஊராட்சிகளில் அமைந்துள்ள 65,500 குடியிருப்புகளில் இதுவரை 23,500 குடியிருப்புகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப் பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள எல்லாக் குடியிருப்புகளுக்கும் குறைந்தது ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியாவது வழங்கவேண்டும் என்பதே எனது பேரவா. எனவே, தற்போதுள்ள விதிமுறைகளைத் தளர்த்தி 50 குடும்பங்கள் வசிக்கும் ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க வேண்டும் என ஆணை வழங்கியுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின்படி 75 கோடி ரூபாய் செலவில் 50,000 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் எல்லாக் குடியிருப்பு களுக்கும் 1996-ஆம் ஆண்டு மார்ச் மாதத் திற்குள் வழங்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது ஊராட்சிகளில் மாட்டு வண்டிகள், மூன்று சக்கர வண்டிகள் மிதி வண்டிகள் மற்றும் சைக்கிள் ரிக்க்ஷாக்கள் போன்றவற்றிற்கு வாகன வரி விதிக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய வாகனங்களை வைத்திருப்பவர்கள் பெரும்பாலும் ஏழை எளிய மக்கள் என்பதால் அத்தகைய மக்களின் நலனில், எங்கள் அரசு கொண்டுள்ள ஆத்மார்ந்த ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வண்ணம், இனி ஊராட்சிகளில் அத்தகைய வாகனங் களுக்கான வாகன வரி விதிப்பு முழுமையாக ரத்து செய்யப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதனை அமல்படுத்தத் தேவையான சட்டத் திருத்தம் விரைவில் கொண்டுவரப்படும்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகுப்பு வீடுகள் கிராமப் புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பயன் படுகின்றன. குறிப்பாக, ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் மிக அதிகமாகப் பயன் அடைகிறார்கள். தமிழகத்தில் இதுவரை கட்டி முடித்து இலவசமாக வழங்கப்பட்ட 2,23,000 வீடுகளில், 1,35,000 வீடுகள் உங்கள் அன்பு அன்னை ஆட்சிக்கு வந்த நான்காண்டுக் காலத்தில் கட்டி வழங்கப்பட்டவை என்ப தையும், இந்த ஆண்டு மட்டும் 70,150 கான்கிரீட் தொகுப்பு வீடுகள் கட்டப்பட உள்ளன என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமின்றி, தொகுப்பு வீடுகளை 14,000 ரூபாய்க்குள்

☆ **சுயநலமே ஒழுக்கக் கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுதான் ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணம் ஆகும்.** — *சுவாமி விவேகானந்தர்*

கட்டிமுடிக்க வேண்டும் என்ற விதிமுறையை ஒதுக்கிவிட்டு, RCC தளத்துடன் கூடிய கான்கிரீட் வீடுகளை மட்டுமே தமிழக அரசு இலவசமாகக் கட்டிக் கொடுக்கின்றது. இதனால் ஒவ்வொரு வீட்டிற்கும் ஏற்படும் கூடுதல் செலவினமான 7,000 ரூபாயை எங்கள் அரசு முழுமையாக ஏற்றுவருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல நேரங்களில் தொகுப்பு வீடுகள் கட்டப்படும் இடங்களுக்கு உடனுக்குடன் அடிப்படை வசதிகள் செய்து தரப் படுவதில்லை. இந்தக் குறையை நீக்கி, இனி தொகுப்பு வீடுகள் கட்டப்படும்போது குடிநீர், இணைப்புச் சாலை வசதி, தெருவிளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளுடன், ஒருங்கிணைந்த முறையில் அமைத்துத்தர ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஒருங் கிணைந்த முயற்சி ஊரக வளர்ச்சிக்கு ஒரு புதிய வேகத்தை வழங்கும் என்று நம்பு கிறேன்.

அறிவியல் வளர்ச்சியின் ஓர் அங்கமான மின் வசதி, பொருளாதார வசதியில்லாத ஏழை எளிய மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காக எங்கள் அரசு "ஒரு குடிசைக்கு ஒரு இலவச மின் விளக்குத்" திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

200 சதுர அடிக்கு மிகாத களிமண் சுவர்களை மட்டுமே கொண்ட கூரை வேய்ந்த குடிசைகளுக்கு மட்டும் இந்த இலவச மின்வசதி வழங்க விதிமுறைகளில் இடம் இருக்கிறது. இதனால் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தமிழக அரசால் இலவசமாகக் கட்டி வழங்கப்படும் கான்கிரீட் வீடுகளுக்கும் இந்த இலவச ஒரு விளக்கு மின் வசதியை வழங்க, தற்போதுள்ள விதி முறைகள் தளர்த்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பெரும்பாலும் சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழுகின்ற மக்கள் மற்றும் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் ஆகியோர் பயன்பெறும் வண்ணம் இத்திட்டம் மேலும் விரிவாக்கப் படுவதால், தமிழக அரசின் நிதிச்சுமை ஆண்டொன்றுக்கு 15 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்தாலும், இதனால் பயன் பெறுவோரின் எண்ணிக்கை அதிகமாகும் என்பதை மனதில்கொண்டு உங்கள் அன்பு அன்னையின் அரசு அந்தச் சுமையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் விபத்தில் உயிர் இழந்தாலோ அல்லது ஊனமுற்றாலோ 25,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை வழங்கும் "விவசாயிகள் இலவச ஈட்டுறுதித் திட்டம்" ஒன்று இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது ஒரு மெட்ரிக் டன் விவசாய விளைபொருளை விற்பனை செய்யும் விவசாயிகள் மற்றும் குத்தகைக்காரர்கள் இந்த இலவச ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்வதற்குத் தகுதி உடையவர்கள் ஆவார்கள். இத்திட்டம் சிறிது சிறிதாக விரிவாக்கம் செய்யப்பட்டு பின்னர் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் 65 வயதை அடைந்த உடன் 25,000 ரூபாய் மானிய உதவித் தொகையாகப் பெறுகின்ற நல்ல தொரு சூழ்நிலையை ஏற்படுத்த எங்கள் அரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண் பெருங்குடி மக்களுக்கு உதவும் இத்திட்டம் இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டு

**தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத்தக்கது குடி என்ற சாபக் கேடுதான்.**

**—காந்தியடிகள்**

# ரேடியோ பேஜிங் சேவை

ரேடியோ பேஜிங் சேவை தற்போது நாட்டில் 22 நகரங்களில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் இந்த சேவை உள்ளது. அகமதாபாத், பெங்களூர், பம்பாய், கல்கத்தா, சண்டிகார், தில்லி, எர்ணாகுலம், ஐதராபாத், இந்தூர், ஜெய்பூர், கான்பூர், லக்னௌ, லூதியானா, பூனா, ராஜ்கோட், சூரத், திருவனந்தபுரம், வதோத்ரா, விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் இச்சேவை உள்ளது. அமிர்தசரஸ், போபால், நாக்பூர், பாட்னா, வாரணாசி ஆகிய நகரங்களில் இச்சேவை விரைவில் தொடங்கப்படும். சில நகரங்களில் அகில இந்திய வானொலி பண்பலை பேஜிங் சேவையைத் தொடங்கியுள்ளன.

வந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகை, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, அதாவது 1992-ஆம் ஆண்டு 400 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. சுதந்திரத் திருநாளை முன்னிட்டு செப்டம்பர் மாதம் முதல் இந்த ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு 1000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்குக் கொடுக்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆண்டொன்றுக்கு 6 கோடி ரூபாய் கூடுதல் நிதிப்பளுவை ஏற்படுத்தும் இத்திட்டத்தின் மூலம் 11,000 குடும்பங்கள் பயன்பெறுவார்கள்.

தமிழக அரசின் MAHAM நிறுவனம் செயல்படுத்திவருகின்ற மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களில் இதுவரை 80,000-க்கும் மேற்பட்ட மகளிர் பயன்பெற்று வருகின்றனர். இவர்கள் சுயதொழில் வளர்ச்சிக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கும், ஆயுள்காப்பீட்டு வசதியைச் செய்து தருவதற்கும் Risk-cum-Development Fund என்ற ஒரு நிதி விரைவில் ஏற்படுத்தப்படும். சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டுவரும் மகளிரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும்போது, அவர்களது குடும்பத்திற்கு 10,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை இந்த நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நன்னாளில் ஏழை எளிய மக்களின் நலன் காக்க சமூக நல மற்றும் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை ஒரு புதிய முனைப்புடன் முழு வேகத்துடன் செயல்படுத்த உங்கள் அன்பு அன்னையின் அரசு உறுதி பூண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் காட்டிய இலட்சியப் பாதையில் மக்கள் பணி ஆற்றி வரும் உங்கள் அன்பு அன்னையின் ஆட்சி, ஏழை எளிய மக்களுக்கு வளமான வாழ்க்கையைப் பெற்றுத் தருவதையே தனது தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படும் என்று உறுதி அளித்து விடைபெறுகிறேன்.

**—15.8.95 அன்று கோட்டைக் கொத்தளத்தில் சுதந்திர தின விழாவில் தேசியக் கொடி ஏற்றிவைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.**



# விடுதலைநாள் விழா நிகழ்ச்சிகள்

தமிழ்நாடு அரசு இந்தியாவின் 49-வது விடுதலை நாள் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

15.8.95 அன்று காலை முதலே மழை பெய்த போதிலும் எக்குறையுமின்றி இவ்விழா இனிதே நடைபெற்றது. அன்று காலை சரியாக 8.30 மணிக்கு மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அரசு தலைமைச் செயலகத்திற்கு வந்து சேர்ந்தார்.

மழையையும் பொருட்படுத்தாமல், வீதியின் இருபுறமும் திரண்டிருந்த மக்கள் வாழ்த்து முழக்கம் செய்து அவரை வரவேற்றார்கள். மலர்ந்த முகத்தோடு கையசைத்தும், கரங்குவித்தும் அம் மக்களுக்கு மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார் மாண்புமிகு முதலமைச்சர்.

கோட்டை முன்னால் வந்திறங்கிய அவரை அரசு தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். அணிவணக்கம் ஏற்கும் மேடைக்கு அவரை அழைத்துச் சென்று முப்படைத் தளபதிகளையும், காவல்துறை உயர் அதிகாரிகளையும் சென்னை மாநகர ஷெரீப்பையும் அறிமுகப்படுத்தினார்.

அதன்பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். பிறகு, தலைமைச் செயலகத்தின் முன்னுள்ள கோட்டைக் கொத்தளத்திற்கு வந்து தேசியக் கொடி ஏற்றி வைத்து விடுதலை நாள் வீர உரை நிகழ்த்தினார்.

பிறகு, கீழே சமூகநலத்துறை சார்பில் அழைத்து வரப்பட்டிருந்த உடல் ஊனமுற்றோருக்கு இனிப்பு வழங்கினார், இதமாகப் பேசி மகிழ்வித்தார்.

உடல் ஊனமுற்றோர் நலனுக்காகச் சிறந்த முறையில் பணியாற்றியவர்களுக்கு விருதுகளும், பரிசுகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.


விடுதலை நாள் விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும், விடுதலைப் போராட்டத் தியாகிகளும் வருகை தந்திருந்தனர்.

அந்த மழையிலும் கோட்டைக்கு எதிரே இருந்த புல்வெளியில் எழில்மிகு இவ்விழாவைக் கண்டு மகிழ ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல்.ஆர்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்
# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




## சி ற ப் பு அ ம் ச ங் க ள்

- 5 $^1/_2$ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

**ஆணையர்**, சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

**மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்**, சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

**மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,**

**வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள்** மற்றும் **சிறுசேமிப்பு முகவர்கள்.**

**இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,**

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்


சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95

# சுகந்தரும் சுதந்தரம்!

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை





இந்திய நாட்டின் சுதந்தரத் திருநாள்
இன்பம் யாவையும் இனிமேல் தருநாள்;
செந்தமிழ்த் தாயின் திருப்புகழ் பாடித்
தெய்வம் தொழுவோம் யாவரும் கூடி.

அன்னிய ஆசைகள் அனைத்தையும் ஒழித்தோம்;
அடிமை என்னும் சொல்லையும் அழித்தோம்;
பொன்னையும் சுகத்தையும் செலவழித் தேனும்
பூரண சுதந்தரம் அடைந்திட வேணும்.

அன்பின் ஆண்மையும் ஆற்றலும் வளரும்;
அன்னை பாரதத் தாய்மனம் குளிரும்;
துன்பம் யாவையும்தொலைத்திட முடியும்;
சோற்றுத் தரித்திர மாவது விடியும்.

முச்சுடர் ஒளிதரும் நம்கொடி நிழலில்
முற்றிலும் சத்திய சாந்தநல் வழியில்
மெச்சிடும் நன்மைகள் மிகமிகக் கொடுப்போம்;
மேதினி எங்கணும் கொடுங்கோல் தடுப்போம்.

எல்லாத் தேசமும் எமக்கினி உறவாம்;
எவரும் செய்திடும் நன்றியை மறவோம்;
நல்லார் யாரையும் நலமுறக் காப்போம்;
நலிப்பவர் எவரும் நடுங்கிடப் பார்ப்போம்.

சுதந்தரம் சுதந்தரம் சுதந்தரம் ஒன்றே
சுகந்தரும் சுகந்தரும் சுகந்தரும் என்றும்;
பதந்தரும் பலந்தரும்; பரமனைக் காணும்
பக்தியென் பவருக்கும் சுதந்தரம் வேணும்.





# சென்னையில் தெற்காசிய விளையாட்டுப் போட்டி

## 7 நாட்டுத் தலைவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் அழைப்பு

## ஒலிம்பிக் சங்கப் பிரதிநிதிகள் கூட்டம்

"**சா**ர்க் நாடுகளான பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம், பூடான், மாலத்தீவு, இலங்கை, இந்தியா ஆகிய வற்றின் தலைவர்கள் அல்லது பொதுச்செயலாளர்கள் பிரதிநிதி களாகப் பங்கு பெற்ற கூட்டம், 5.8.95 அன்று தலைமைச் செயலகத்தில் நடந்தது.

அன்று மாலை பிரதிநிதிகள், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களைச் சந்தித்தனர். இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் தலைமை ஏற்று அவர்களை அழைத்து வந் திருந்தார்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., கல்வித்துறைச் செயலாள்ர் எல்.என். விஜய ராகவன், இ.ஆ.ப., மற்றும் தொடர்புடைய துறைகளின் அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு கே. பொன்னுசாமி, மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி ஆகியோரும் இந்தச் சந்திப்பின் போது உடனிருந்தனர்.

தொடக்கத்தில் திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள், ஒலிம்பிக் சங்கங்களின் பிரதி நிதிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள், தனது வரவேற்பு ரையில், விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் தமிழக முதலமைச்சர் காட்டும் தீவிர ஆர்வத்தை விளக்கினார்.

சர்வதேச அமைப்புத் தட களப் போட்டி மற்றும் ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பைக் கால்பந்துப் போட்டி போன்ற பல்வேறு சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகள் முதல் வரின் ஆர்வத்தால் சென்னை யில் வெற்றிகரமாக நடந்தேறி யதை திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமைதான் 7-வது தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியை நடத்தும் அரிய வாய்ப்பை இந்திய ஒலிம்பிக் சங்கம் பெற உதவியது என்றும் அவர் கூறினார். சர்வதேசத் தரத்துடன் தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியை நடத்த அவர் காட்டும் ஆர்வம் தொடர்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடிக்க இந்திய ஒலிம்பிக் சங்கம் முழு ஒத்துழைப்பையும் நல்கும் என டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் உறுதி அளித்தார்.

தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியைச் சீரோடும் சிறப்போடும் நடத்தத் தமிழக அரசு கடமைப்பட்டுள்ளது என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உறுதி கூறினார்.

விளையாட்டுக் கிராமம் சர்வதேசத் தரத்துடன் கட்டப்பட்டுவருவதை மாண்புமிகு முதல்வர் சுட்டிக்காட்டினார். இது தவிர, அனைத்து ஸ்டேடியங்களும் இதர வசதிகளும் சர்வதேசத் தரத்துடன் அமைந்து வருவதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக் காட்டினார்.

**ரூ.200 கோடி செலவு**

இந்தப் போட்டிக்கான மொத்தச் செலவுத் தொகையான ரூ.200 கோடியில் இந்திய அரசு பெயரளவிலான உதவித் தொகை வழங்கும் நிலையில், மொத்தச் செலவையும் தமிழக அரசே ஏற்றுக் கொள்கிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார். சர்வதேசத் தரத்துக்கு ஏற்ப, ஏதாவது இன்னும் தேவையா என்பது குறித்து ஆலோசனைகளை பிரதிநிதிகளிடமிருந்து வரவேற்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.

பல்வேறு வகையில், விளையாட்டுப் போட்டிக்கான திட்டங்கள் கண்டுள்ள முன்னேற்றத்தைத் தலைமைச் செயலாளர் அவர்கள் விளக்கினார். தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியின் வரலாற்றில் தற்போதுதான் சர்வதேசத் தரத்துடன் விளையாட்டுக் கிராமம் உருவாகி வருவதாக அவர் தெரிவித்தார். அதிக அளவிலான விளையாட்டுக்களில் (14 விளையாட்டுக்கள்) அதிக எண்ணிக்கையிலான வீரர்கள், வீராங்கனைகள் சென்னைப் போட்டியில் கலந்து கொள்ள இருக்கிறார்கள் என்றும் தலைமைச் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் சார்பில், இலங்கை ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு. ராய் டிசில்வா நன்றி கூறினார். 1984-ஆம் ஆண்டு தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி தொடங்கப்பட்டது முதல் தனக்குத் தொடர்பு உண்டு என்றும், விளையாட்டுத்துறை வளர்ச்சியின்பால் இத்தகைய ஈடுபாடு கொண்ட முதல்வரை ஒருபோதும் பார்த்தது கிடையாது என்றும் அவர் அப்போது குறிப்பிட்டார். விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் மாண்புமிகு முதல்வர் காட்டும் அக்கறையும், ஆர்வமும், ஊக்கமும் ஈடுஇணையில்லாதது. அனைத்துக் கட்டடப் பணிகளையும் அக்டோபர் மாதத்துக்குள் செய்து தருவதில் கண்ணும் கருத்துமாகச் செயல்படும் அதிகாரிகளையும் இந்த ஆர்வம் சூழ்ந்துள்ளது.

# பெண் கல்விக் கும்மி!

—சீனி. விஜயராணி

பெண்ணெனத் தோன்றிடும் பேறுபெற்றோம் - அந்தப்
பிறைமுடி யானிலோர் கூறுபெற்றோம்
மண்ணினில் மங்கையர் மாண்புறவே - நல்ல
மாசில்லா மார்க்கத்தைக் காண்குவமே!

வீடுசி றப்பதும் பெண்ணாலே - என்று
வேதங்கள் செப்பின முன்னாலே;
நாடுமுன் னேறிடும் தன்னாலே - நாங்கள்
நற்கல்வி பெற்றிடில் மண்மேலே!

மங்கையர் கல்வியில் தேர்ந்திடவே - நெஞ்சில்
மடமைகள் மாய்ந்து தூர்ந்துவிடும்;
பொங்கிய வெள்ளம்போல் ஞானமுற - இந்தப்
பூதலத் தின்புகழ் வானுயரும்!

பள்ளியெ னும்கோவில் நாடிடுவோம் - அங்கு
பல்கலைச் செல்வங்கள் தேடிடுவோம்;
தெள்ளிய திண்மதி பெற்றிடவே - நம்மைத்
தேடியே வந்தெய்தும் வெற்றியெலாம்!


வண்டமிழ் ஔவைநம் முன்னோடி - அவள்
வார்த்தைகள் வாழ்வியல் கண்ணாடி;
தண்டமிழ்க் காவியம் நாம்படைப்போம் - பெண்ணைத்
தாழ்த்திடும் பேதமெல் லாம்உடைப்போம்!

பாரதி போற்றிய பண்புகளைப் - பெற்றுப்
படைத்திட வந்தோம் விண்புகழை;
சாரதி யாகி நடத்திடுவோம் - நாட்டைச்
சமத்துவம் என்னும் தடத்தினிலே!

உயர்ந்த தரத்துடன் மாண்புமிகு முதல்வர் அளித்துள்ள உதவிகள், அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டி அல்லது காமன்வெல்த் போட்டியை நடத்தும் வாய்ப்பை சென்னை நகரம் உறுதியுடன் கோர வழிவகுத்துவிட்டது என்றும் திரு. ராய் டிசில்வா கூறினார்.

நிகழ்ச்சியின் இறுதியாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பேசுகையில், அனைத்து நாட்டுத் தலைவர்களும் தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியைக் காணவரும்படி வேண்டுகோள் விடுத்தார். தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி தங்களது நாட்டின் தலைவர்களையும், மற்றவர்களையும் சென்னைப் போட்டியைக் காண வருமாறு அழைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

தனது பங்காக, இந்திய அரசின் வெளியுறவுத்துறை வழியாக, நாட்டுத் தலைவர்களுக்கும் முறைப்படி அழைப்பை அனுப்பப்போவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.



# "கான்வென்ட்டில்" சேரும் தொட்டில் குழந்தைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தொட்டில் குழந்தைகள் திட்டத்தினைத் தொடர்ந்து, 64 பெண் குழந்தைகள் இத்தொட்டில்களில் போடப்பட்டு உயிர் பிழைத்தனர்.

இதில் சில குழந்தைகள் இப்போது பள்ளிக் கூடங்களுக்குச் செல்லும் வயதை நெருங்கிவிட்டார்கள். இந்தக் குழந்தைகளுக்கு நன்முறையில் கல்வி அளிக்க வேண்டும், அவர்கள் வளர்ப்புக் கல்வி பற்றி கண்காணித்து மாதந்தோறும் அறிக்கை தர ஒரு கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

தொட்டில்களில் போடப்பட்ட குழந்தைகளில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மகாலட்சுமி, தனலட்சுமி, பாக்கியலட்சுமி, ஜெயலட்சுமி என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பெயரிடப்பட்ட 4 குழந்தைகள் இப்போது பள்ளிக் கூடங்களுக்குச் செல்லப் போகிறார்கள்.

9.8.95 அன்று முதல் சென்னை நகரில் உள்ள பெரிய கான்வென்ட்டுகளுக்குப் படிக்கச் செல்லும் அந்தக் குழந்தைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஆசி பெற, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திர குமாரி அவர்கள் தலைமைச் செயலகத்திற்கு அழைத்து வந்தார். அந்தக் குழந்தைகள், கான்வென்ட்டுக்கு உரிய சீருடை, காலணிகள் மற்றும் டை அணிந்து பெரிய செல்வந்தர்கள் வீட்டுக் குழந்தைகள் போல மிடுக்காக வந்தபொழுது அங்குக் கூடியிருந்தவர்களுக்கு அதிக ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அந்தக் குழந்தைகளை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திர



திருச்சி மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, அதில் கரூரைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்துக்குத் தீரன் சின்னமலை பெயர் சூட்டப்படும் என்று அறிவித்ததற்கும், சென்னையில் தீரன் சின்னமலை கவுண்டர் சிலைவைக்க இடம் கொடுத்ததற்கும் கொங்கு வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு பிரிவினர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் திரு என்.அரிபாஸ்கர், இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர் (5.8.95).

குமாரி அவர்களும், சமூக நலத்துறைச் செயலாளர் திருமதி கரியாலி, இ.ஆ.ப., அவர்களும் குழந்தைகளின் கைகளைப் பிடித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். குழந்தைகளின் கைகளில் சிறிய மலர்க் கொத்துக்கள் இருந்தன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கண்களில் நீர் ததும்ப மிகவும் உணர்ச்சி வசப்பட்டு, அந்தக் குழந்தைகளை ஒவ்வொருவராகத் தூக்கி வைத்து முத்தம் கொடுத்தார்கள். குழந்தைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மலர்க் கொத்துக்களைக் கொடுத்தார்கள்.

பின்பு, ஒவ்வொரு குழந்தையாக அழைத்துத் தமிழிலும், ஆங்கிலத்திலும் கேள்விகள் கேட்டார்கள். குழந்தைகளைத் தட்டிக் கொடுத்து சிறிது நேரம் அவர்களுடன் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

மேலும், அங்கு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திர குமாரி மற்றும் சமூகநலத்துறைச் செயலர் திருமதி கரியாலி, இ.ஆ.ப., அவர்களிடம், இந்தக் குழந்தைகள் நன்றாகப் படிக்க எல்லா ஏற்பாடுகளையும் கண்ணுங் கருத்துமாகச் செய்ய வேண்டும் என்றும், கண்காணிப்புக் குழுவினர் மாதம் ஒருமுறை இது தொடர்பாக அறிக்கை தர வேண்டும் என்றும், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் அவ்வப்போது தொட்டில் குழந்தைகளின் படிப்புப் பற்றித் தனக்குத் தகவல் தரவேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்மைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

பின்பு, தொட்டில் குழந்தைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் விடைபெற்றுச் சென்றனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறைக்குத் தொட்டில் குழந்தைகள் வந்து சென்றபொழுது ஏராளமானவர்கள் கூட்டமாக நின்று அந்தக் குழந்தைகளைப் பார்த்தனர்.



# 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மகாவீரர் சிற்பமும், வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும் கண்டுபிடிப்பு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வரலாற்றுச் சிறப்புமிக்க வட்டெழுத்துக் கல்வெட்டுடன் கூடிய மகாவீரர் சிற்பம் ஒன்றை மதுரை மாவட்டம் வடுகப்பட்டி என்ற ஊரில் கண்டுபிடித்திருக்கிறது. மகாவீரர் சிற்பத்தின் இடப்புறம் வட்டெழுத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இது தவிர இரண்டு கற்பலகைகளிலும் வட்டெழுத்துக் கல்வெட்டு எழுதப் பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவை வடுகப்பட்டியைச் சேர்ந்த திரு உதயசந்திரன் என்பவரது நிலத்தில் வெகு நாளாகக் கிடப்பதை திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த காசியல் கழக உறுப்பினர் திரு ஏ. மனோகரன் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை திருச்சிராப்பள்ளி பதிவு அலுவலர் திரு கி. ஸ்ரீதரன் பார்வைக்குக் கொண்டு வந்தார்.

தாமரை பீடத்தில் மகாவீரர் ஆடையேதுமில்லாமல் கைகளைத் தொங்கவிட்டு நேராக நின்ற நிலையில் சிற்பம் உள்ளது. இவரது இருபுறமும் சாமரங்களும் தலைக்கு மேலாக குடையும் காட்டப்பட்டுள்ளன. இவரது காதுகள் நீண்டு பெரிய துளையுடையனவாக உள்ளன. இவரது இடப்புறம் வட்டெழுத்துக் கல்வெட்டுள்ளது. சிற்ப அமைதி மற்றும் கல்வெட்டு எழுத்தமைதியைக் கொண்டு இது கி.பி. **10-11-ஆம்** நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம். இச்சிற்பம் **4.5** உயரமும் **1.5** அடி அகலமும் உள்ளது. இதில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு மாலைக்குளம் என்ற ஊர் மீண்டும் சீரமைக்கப்பட்டு விளைநிலமாகக் கொண்டு வரப்பட்டதைத் தெரிவிக்கிறது.

இரண்டு பலகைக் கற்களில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு மூன்று பக்கங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டும் கி.பி. **10-11-ஆம்** நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம்.

இக்கல்வெட்டு மானசித்த நல்லூர் என்ற பெயருடைய மாலைக்குளம் என்ற ஊரில் உள்ள தர்மசாலை மற்றும் குளம் ஆகியவை அத்தாணிகள் என்ற சமண வணிகர்களது வீரர்களுக்குச் சொந்தமாக ஆகிறபடியால் இவற்றிற்கு எல்லைக்கற்கள் நடப்பட்டு, இவைகளைப் பிற சமயத்தார் மற்றும் அவர்களது கூலிப் படையினரால் தாக்குதல் மற்றும் அழிவுகளிலிருந்து திசை ஆயிரத்து ஐந்நூற்றுவரான பெரிவாரியன், வெம்பன் வயிரியன், கட்டாணைராமன் மற்றும் சமண வணிகரது வீரர்கள் ஆகியோர் பாதுகாக்க வேண்டும் என்ற செய்திகளைக் குறிப்பிடுகிறது.

இக்கல்வெட்டிலிருந்து மானசித்தநல்லூரான மாலைக்குளம் சமண மதத்திற்குரிய ஒரு சிறப்பிடம் என்பதும், இங்கு திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் என்ற வணிகர் குழுவினர் வாழ்ந்தனர் என்பதும் தெரிய வருகிறது. இந்த வணிகர் குழு தங்களுக்கென்று தனியாக அத்தாணிகள் என்ற பாதுகாப்புப் படையை வைத்திருக்கிறது. அத்தாணிகள் என்பது அத்திகோசம் என்ற வடமொழிச் சொல்லின் தமிழாக்கமாக இருக்கலாம்.

இத்தகவல்களைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் திரு நடன காசிநாதன் தெரிவித்தார்.

*11.8.1995 அன்று நடைபெற்ற காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.*



# "மனிதகுல மேம்பாட்டிற்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டவர் பெரியவர் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள்!"

## காஞ்சிபுரம் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் உரை

**கா**ஞ்சிப் பெரியவர் என்றும், மகா சுவாமிகள் என்றும், உலகெங்கும் வாழ்கின்ற இறையன்பர்களால், அன்போடும் பக்தியோடும் வணங்கப் படுபவரும் இந்தியாவின் தலை சிறந்த ஆன்மிகவாதிகளில் முக்கியமானவராக, அனைவராலும் போற்றப்படுபவருமாகிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, மகாஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள் அவர்களுடைய 60-வது பிறந்த நாள், சஷ்டியப்தபூர்த்தி மணி விழாவில் பங்கேற்று, இங்கே



பெருந்திரளாகக் குழுமியிருக்கின்ற, உங்கள் அனைவரையும் க்ண்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

இந்தச் சீரிய விழாவில் கலந்து கொள்வதாக இருந்த பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள் நேற்று என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்கள். காஞ்சிப் பெரியவர் அவர்களின் மணி விழா நிகழ்ச்சியில் எப்படியாவது கலந்து கொள்ள வேண்டும் என்று, தான் மிகவும் விரும்பியதாகவும், இருப்பினும் திடீரென்று ஏற்பட்ட உடல்நலக் குறைவினால், இந்த விழாவில் பங்கேற்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது என்பதையும் என்னிடம் தெரிவித்தார்கள். காஞ்சி மாநகருக்கு வருகைதந்து, இந்த விழாவில் கலந்துகொள்ள முடியாததற்கு மாண்புமிகு பிரதமர் அவர்கள் மிகுந்த வருத்தத்தை என்னிடம் தெரிவித்தார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக வரலாற்றின் ஆன்மிக வளர்ச்சியில் இந்தியாவுக்கு எப்போதுமே ஒரு தனி இடம் உண்டு. ஏனென்றால், புதிய சிந்தனைகள், புதிய தத்துவங்கள், மதங்கள் வடிவிலே வளர்ந்த பூமி இது. பல புண்ணிய சீலர்கள், அவதரித்த இடம் இது. காஞ்சியைப் போல, பல ஆன்மீகத் திருத்தலங்களைக் கொண்ட தமிழகம், இந்திய நாட்டு ஆன்மீக வளர்ச்சிக்கு ஆற்றிய பெரும் சேவை, சரித்திரத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தியத் திருநாட்டின் இறைத் தன்மைக்கு எடுத்துக் காட்டுகளாகத் தனது நீண்ட வரலாற்றுப் பின்னணியுடன், பண்பாட்டுப் பலகணிகளாக விளங்கும் தலைசிறந்த திருக்கோயில்கள் அமைந்துள்ள மாபெரும் திருத்தலம்தான் காஞ்சி மாநகர் என்ற இந்தப் புனித பூமி. இந்தியாவின் ஆன்மிக ஊற்றாக விளங்கிக்கொண்டிருக்கும் இத்திருத்தலத்தில், இறைப் பணியையும், சமுதாய முன்னேற்றத்தையும் இணையச் செய்து மனித குல மேம்பாட்டிற்காகத் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டு இருக்கும் பெரியவர், ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகளின் மணி விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறுவது மிகவும் ஏற்புடையதாகும். இன்று காஞ்சி மாநகர், விழாக்கோலம் பூண்டிருப்பதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இறைப் பணி என்பது ஆலயப் பணி என்பதோடல்லாமல், வாழும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் நலிவடைந்தோரின் நல்வாழ்விற்கும் அன்னைத் தமிழின் ஏற்றத்திற்கும் வேத ஆகமக் கல்வியின் வளர்ச்சிக்கும் வழி வகுக்கும் ஒரு மாபெரும் பணி என்ற புதிய தத்துவத்தை, இன்று உலகிற்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் உணர்த்திக்கொண்டு வருகின்றது.

ஒரு நூற்றாண்டுக்குமேல்,



இவ்வுலகில் நம்மிடையே வாழ்ந்து, எண்ணற்றோருக்கு வாழ்க்கையின் உண்மைப் பொருளையும், நம்பிக்கையையும் உன்னத அருளையும் வழங்கிக் கொண்டு இருந்த, காஞ்சி மாமுனிவர், பரமாச்சாரியார் மகா சுவாமி அவர்களின் பூவுடல் மறைந்தாலும், இன்றும் அவர் புகழுடல் மறையவில்லை. அவர் வழி நின்று அவர் போதித்த தத்துவங்களையும் அவர் எடுத்துரைத்த ஏற்றமிகு கருத்துக்களையும் மக்கள் மத்தியில் பரப்ப, சீரிய முறையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் செயலாற்றி வருவதை எண்ணி நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உலகத்தில் நல்லவை பெருகி, அல்லவை அழிய வேண்டும், என்ற மனித குலத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஆன்மிகம் ஒரு புதிய வழியைக் காட்டிவருவதை எண்ணி நான் பெருமிதம் அடைகிறேன்.

இறையுணர்வு என்பது திருக்கோயில்களில் மட்டுமின்றி, மனித உள்ளங்களிலேயும், மனித சமுதாயத்தை மேம்படுத்துவதிலேயும், தூய உணர்வுடன் சமுதாயப் பணி ஆற்றுவதிலும் அடங்கியிருக்கின்றது என்பதைத் தமது எண்ணற்ற ஆன்மிக, சமூக, மற்றும் சமுதாய நலப் பணிகள் மூலம், எடுத்துக்காட்டி வருபவர் காஞ்சிப் பெரியவர் அவர்கள். புதிய திருக்கோயில்களைக் கட்டுவித்து, தொன்மையும் சரித்திரச் சிறப்பும் மிக்க ஆன்மிக பாரம்பரியத்தைப் பாதுகாத்து வருவதோடு சமுதாய நலனைக் கருத்தில்கொண்டு, கல்விச் சாலைகள், மருத்துவமனைகள், மற்றும் நூலகங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளை ஆங்காங்கே ஏற்படுத்தி அனைத்துத்தரப்பு மக்களுக்கும் சேவை செய்துவரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், பல்வேறு அறிநிலையங்களையும் பசு பாதுகாப்பு நிலையங்களையும், மருத்துவமனைகளையும், கல்விச் சாலைகளையும் நடத்தி வருகின்றது. முதியோர், மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லங்களும், வேதபாடக் கல்விச் சாலைகளும், நடைபெற்றுவருகின்றன. நம்முடைய வேத சாத்திரங்களையும் தொன்மையான கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் காப்பாற்றி

# தமிழகத்தில் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது!

தமிழகத்தில் 1984-இல் ஆயிரம் பேருக்கு 28 சதவிகிதமாக இருந்த பிறப்பு விகிதம், 1995-இல் 19 சதவிகிதமாகக் குறைந்து விட்டது. இனிவரும் ஆண்டுகளில் மேலும் குறைந்து 15 சதவிகிதமாகி விடும் என்று மாநிலக் குடும்ப நலக் குழு உறுப்பினர் திரு டி.வி. அந்தோணி அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்.

சேலம் அருகே ஜாரி கொண்டலாம்பட்டியில் உலக மக்கள் தொகை நாள் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு திரு டி.வி. அந்தோணி அவர்கள் பேசினார்.

தமிழக மக்கள் நல்வாழ்வுக்காகத் தமிழக அரசு 15 அம்சத் திட்டத்தைத் தீட்டியுள்ளது. கேரளத்தில் பிறப்பு விகிதம் 17.2 சதவிகிதமாகும் தமிழகத்தில் 19.2 சதவிகிதமாகும். பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழகத்தில் ஆண்டுக்கு 11 இலட்சம் குழந்தைகள்தான் பிறக்கின்றன. இங்கு 15 அம்சத் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்துவதன் மூலம், குழந்தைகள் பிறப்பை மேலும் கட்டுப்படுத்த முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.


அதன் பெருமைகளை உலகறியச் செய்வதிலும் அதன்மூலம் மக்களுக்கு, அமைதியான வாழ்க்கையைப் பெறச் செய்வதுமே தனது தலையாய கடமையாகக் கொண்டு, இந்த ஸ்ரீமடம் இயங்கி வருகின்றது. எனவே, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், மேற்கொண்டு வருகின்ற அனைத்து அறப் பணிகளும், மென்மேலும் வ்ளர்ந்து செழித்தோங்க வேண்டும் என்ற எனது பேரவாவினைத் தெரிவித்துக்கொண்டு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் மேற்கொள்ளும் நற்பணிகளுக்குத் தமிழக அரசு உறுதுணையாக விளங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள தொன்மையும், சரித்திரச் சிறப்பும் வாய்ந்த, நமது கலாச்சாரத்தின் பலகணிகளாக விளங்கும், தமிழகத்தின் திருக்கோயில்களைப் பராமரிப்பதில் எங்கள் அரசு எடுத்துவருகின்ற நடவடிக்கைகளை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். தமிழகத்தின் பட்டித்தொட்டிகளில் அமைந்துள்ள, எல்லாத் திருக்கோயில்களிலும் குறைந்தபட்சம் ஒரு கால பூஜையாவது நடைபெற வேண்டும் என்பதற்காக, எங்கள் அரசு செயல்படுத்திவருகின்ற திட்டம், மக்கள் மத்தியில் பெற்றுள்ள வரவேற்பை அனைவரும் நன்கு அறிவீர்கள். சிதிலமடைந்த பல திருக்கோயில்களுக்கு, எங்கள் ஆட்சியில் சம்புரோக்ஷணமும், திருப்பணிகளும், முழுமையாக நடைபெற்றுள்ளன. இந்தப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழகத்தின் பாரம்பரியம் மிக்க திருக்கோயில்களின் பராமரிப்பில், தமிழக அரசு என்றென்றும் முன்னணியில் நிற்கும் என்பதில் சந்தேகம் இல்லை. மக்கள் மனங்களில் புதிய நம்பிக்கையையும், நல்ல ஆன்மிக உணர்வையும் ஏற்படுத்தி, அதன்மூலம் இந்தச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் வழி வகுக்கின்ற திருக்கோயில்களின் பராமரிப்பு, மேலும் செம்மையாகவும் சிறப்பாகவும் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியை, இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

காஞ்சிப் பெரியவர் அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளுடனும் பல்லாண்டு வாழ்ந்து, மென்மேலும் இறைப் பணியையும், சமூகப் பணியையும் மேற்கொண்டு, சீரிய புகழையும், எல்லாச் சிறப்புகளையும் அடையவேண்டும் என்று உங்கள் அனைவரின் சார்பிலும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் பெருமை, உலகெங்கும் பரவ வேண்டும் என்ற எனது பேரவாவினையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீரோடும் சிறப்போடும் நடைபெறும் காஞ்சிப் பெரியவர் மணி விழாவில் கலந்துகொள்ள எனக்கு அழைப்பு விடுத்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்திற்கும், காஞ்சிப் பெரியவர் அவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.



# பெருந்தலைவர் காமராஜர் வாரிசுகளுக்கு உதவிகள்-

## மாண்புமிகு முதல்வர் வழங்கினார்


பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் தங்கையின் பேரன் திரு ஆர். கனகவேல் அவர்களுக்கும், காமராஜர் அவர்களின் மற்ற வாரிசுகளுக்கும் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே அறிவித்து இருந்தார்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏழு இலட்சம் ரூபாயில் காமராஜர் குடும்ப நல நிதி (Kamaraj Family Welfare Fund) ஒன்றை ஏற்படுத்தி அந்தப் பணத்தை வைப்பு நிதியில் இட்டு அதன்மூலம் கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு காமராஜர் அவர்களின் வாரிசுகளுக்கு மாதா மாதம் நிதி உதவி வழங்குகின்ற திட்டம் ஒன்றையும் அறிவித்து இருந்தார். மேலும், திருமதி நாகம்மை அவர்களின் மகள் திருமதி மங்களம், திருமதி கமலா தேவி மற்றும் திரு கனகவேல் ஆகியோருக்கு, தமிழக அரசின் சார்பில் இலவசமாக வீடுகள் வழங்குவதற்கு ஆணையிட்டு இருந்தார்கள்.

8.8.95 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் வாரிசுகளைத் தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்து அந்த உதவிகளை நேரில் வழங்கினார்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் ஏழு இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ள காமராஜர் குடும்ப நல நிதி, நிரந்தர வைப்பு நிதியில் வைக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு 5 பேருக்குப் பிரித்துக் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

திருமதி கமலாதேவி அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2,333 ரூபாயும், திருமதி ஆர். மங்களம் அவர்களுக்கு 1,166, திரு கே. ஜவஹர்லால் அவர்களுக்கு மாதம் 1,166 ரூபாயும், திரு கே. மோகன் அவர்களுக்கு 1,166 ரூபாயும், காமராஜர் அவர்களின் சிதைக்குத் தீமூட்டிய தங்கையின்



பேரன் திரு கனகவேல் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு **2,333** ரூபாயும், மேலும் **5** ஆண்டுகளுக்கு அவற்றைப் பெறுவதற்கான காசோலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நேரில் வழங்கினார்கள். மொத்தம் **5** ஆண்டுகளுக்குரிய பின் தேதியிட்ட காசோலைகள் அவர்களிடத்தில் வழங்கப்பட்டன. மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தபடி, திருமதி நாகம்மையின் மகள் திருமதி மங்களத்திற்கு மதுரையில் வீடு ஒன்றினை ஒதுக்கீடு செய்து அதற்கான ஒதுக்கீட்டு ஆணையை அவர்களிடம் வழங்கினார்கள்.


திருமதி நாகம்மையின் மற்றொரு மகளான திருமதி கமலாதேவி அவர்களுக்கு விருதுநகரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றினை இலவசமாக வழங்கி, அதற்குரிய ஒதுக்கீட்டு ஆணையையும் அவர்களிடம் நேரில் வழங்கினார்கள்.

திருமதி நாகம்மையின் பேரன் திரு கனகவேல் அவர்களுக்கு சென்னையில் ஒரு உயர்தர வருவாய்ப் பிரிவில் அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றை இலவசமாக வழங்கி அதற்குரிய ஒதுக்கீட்டு ஆணையை அவர்களிடம் நேரில் வழங்கினார்கள்.

திருமதி நாகம்மையின் பேரனும், திரு கே. மோகன் அவர்களின் மகனான திரு சிவகுமார் தனக்கு அரசு பணியிடம் வேண்டும் என்று கேட்டு இருந்த கோரிக்கையை ஏற்று, அவருக்குப் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்து அதற்குரிய நியமன ஆணையையும் திரு சிவகுமாரிடம் வழங்கி தனது வாழ்த்துக்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக்கொண்டார்கள்.

அவர்களது குறைகளைக் கேட்டு அறிந்ததோடு, அவற்றைக் களைவதற்கு ஏற்பாடுகளைச் செய்து அனைத்து உதவிகளையும் உடனடியாக வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் வாரிசுகள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

- சோம்பலினால் உடல் மட்டுமல்ல; உள்ளமும் கெட்டுவிடுகிறது.
  –சாரதா தேவி.
- உங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை பிறக்காதவரையில் இறைவன் மீது உங்களுக்கு நம்பிக்கை பிறக்காது.
  – விவேகானந்தர்.



# புதுக்கோட்டை மாவட்டத்தில்

# காயிதே மில்லத் நூற்றாண்டு விழா

புதுக்கோட்டை மாவட்டத்தில், கோட்டைப்பட்டினத்தில் கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் நூற்றாண்டு விழா **18.8.95** அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் முன்னிலை வகித்தார்.

காயிதே மில்லத் புகைப்படக் கண்காட்சி மற்றும் காயிதே மில்லத் உருவப் படத்தை மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வெ. வரபிரசாத ராவ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் பேசும் பொழுது கூறியதாவது.

"நபிகள் நாயகம் சொன்ன அறிவுரையின்படி யார் இந்தச் சமுதாயத்திற்கு நன்மை செய்கிறார்களோ அவர்களுக்கு விசுவாசமாக இருங்கள் என்றார். நமது புரட்சித்தலைவி அவர்கள் இதுவரை இல்லாத வகையில் உலமா பென்சன் 1,700 பேருக்கு ரூ.400 வீதம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

"மேலும் கணக்கெடுத்து எத்தனைப் பேர்கள் உள்ளார்களோ அத்தனைப் பேர்களுக்கும் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். முஸ்லீம் சமுதாயத்தினர் மயானத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்க ரூ.15 இலட்சமும், வக்ஃப் வாரியக் கட்டடம் கட்ட ரூ.5 இலட்சமும் முதல்வர் வாரி வழங்கி உள்ளார்கள். எத்தனைப் பேர் முதலமைச்சர் வந்துபோய் இருக்கிறார்கள். ஆனால், எவரும் நமது சமுதாயத்தைக் கவனிக்கவே இல்லை. வக்ஃப் வாரியக் கடனை அடைக்க ரூ.70 இலட்சம் வழங்கினார்கள். ஒவ்வொரு ஆண்டும் 30 இலட்சம் நிதி ஒதுக்கப்படும் என நமது முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்" என்றார்.

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு அப்துல் சமது அவர்கள் பேசியபோது:

"மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்குக் காயிதெ மில்லத் மாவட்டம் எனப் பெயரிடப்படும் எனத் தெரிவித்தார். காலத்தின் விதி வசத்தால் அவர் விட்டுச் சென்ற பணியைப் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றினார். மேலும் உலமாக்களுக்கு உதவித்தொகை வேறு எந்த மாநிலத்திலும் வழங்கப்படவில்லை. தமிழ்நாட்டில் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 1,700 பேருக்கு ரூ.400 மாதந்தோறும் வழங்க வகை செய்தார். அது மட்டுமல்ல, இன்னும் எத்தனைப் பேர் இருக்கிறார்கள் எனக் கணக்கெடுத்து அத்தனைப் பேர்களுக்கும் வழங்கப்படும் என ஆணைபிறப்பித்துள்ளார்கள். அதுமட்டுமல்ல, அண்ணா நினைவிடம், புரட்சித் தலைவர் நினைவிடம் போல் கண்ணியத் தென்றல் காயிதெ மில்லத் அவர்களுக்கும் நினைவிடம் அமைக்கத் தகுதியான ஒரு நல்ல இடம் ஒதுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். இதற்கெல்லாம் நமது சமுதாயம் நன்றி பாராட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசியபோது:

"யார் யார் பெருமைக்கு உரியவர்களோ, யார் யார் புகழுக்கு உரியவர்களோ அவர்களுக்கு எல்லாம் பெருமை சேர்ப்பதில் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் தவறியதே இல்லை. வித்தகர்களுக்கு, நாடு போற்றும் நல்லவர்களுக்கு, கவிஞர்களுக்கு, தியாகசீலர்களுக்கு, நாட்டுக்காக உழைத்த நல்லவர்களுக்குத் தமிழக அரசு – புரட்சித்தலைவி அரசு விழா எடுக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம் கேரளத்திலிருந்து பிரிந்து தமிழ் நாட்டுடன் இணைய போராடிய நேசமணியைப் போற்றிப் புகழ எண்ணி அவரது பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை இந்த மாதம் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் கொண்டாட முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு உள்ளார்.

"கண்ணியமிகு காயிதெ மில்லத் அவர்கள் இந்தியத்தாய் பெற்றெடுத்த நல்ல பிள்ளை. இஸ்லாத்தின் அறம் தழைக்க பூத்த முல்லை. உறுதிகொண்ட மனம், ஒப்பற்ற ஞானம், ஒழுக்கத்தின் சான்று, சமத்துவப் பண் அத்தனையையும் மொத்தமெனக் குத்தகைக்குப் போகாமல் சொந்தமெனக் கொண்டவர். சந்தமிகு செந்தமிழின் மைந்தர். தாய்மொழிப் பற்றினோடு நாட்டுப்பற்று மிக்கவர். சீனப் போரும் – பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின் போது எடுத்துக்கொண்டு தடுத்தாண்டவிதமும் அவர் நாட்டுப்பற்றுக்குச் சான்று பகர்கின்றன.

"தமிழ் ஆட்சிமொழியாகப் பலரால் பல வகையில், பல்

---

**தேசத்தொண்டு என்பது, மனித சமுதாயத்தின் தொண்டு என்பதேயாகும்!**

**–அண்ணல் காந்தியடிகள்**

# சுற்றுச் சூழல் வெப்பமடைவதால் மலேரியா

உலகின் சுற்றுச் சூழல் வெப்பமடைந்து வருவதாகவும், இதன் காரணமாகவே உலகில் மலேரியா, மஞ்சள் காய்ச்சல் நோய் போன்ற நோய்கள் ஏற்படுவதாகவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இதனால் ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கானோர் இறக்க நேரிடுகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் கோடைக் காலத்தில் வெப்பம் உயரக் கூடும் என்றும், கடும் அனல் காற்று வீசக் கூடும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். இந்த ஆண்டுத் துவக்கத்தில் அமெரிக்காவில் சிகாகோ நகரில் ஐந்து நாட்களுக்குக் கடும் காற்று வீசியபோது, 500 க்கும் அதிகமானோர் இறந்து போனதை அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அந்த ஐந்து நாட்களின்போது வெப்பம் 41 டிகிரி செல்ஸியஸையும் தாண்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

டெங்கு காய்ச்சல், மஞ்சள் காய்ச்சல் போன்ற நோய்களின் கிருமிகளைப் பரப்பும் கொசுக்கள் அதிகமாக வளர்வதற்கு வெப்பமான சீதோஷ்ண நிலையே காரணம் என்று டாக்டர் பால் எப்ஸ்டீன் என்னும் விஞ்ஞானி கருத்து தெரிவித்துள்ளார்.

இந்தியா, கொலம்பியா, கென்யா, கோஸ்டாரிகா ஆகிய நாடுகளில் இத்தகைய கொசுக்கள் அதிகமாக இருப்பதாக இவர் கூறுகிறார். துவக்கத்தில் 1000 மீட்டர்களுக்குத் தாழ்வான இடங்களிலேயே இந்த வகைக் கொசுக்கள் காணப்பட்டதாகவும், ஆனால் இப்போது 2000 மீட்டர்களுக்கு மேல் உயரமுள்ள இடங்களில் கூட இவை காணப்படுவதாகவும் டாக்டர் பால் எப்ஸ்டீன் சொன்னார்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

---

வேறு காலகட்டங்களில் கூறப்பட்டன. காயிதெமில்லத் தமிழ்ப் பற்று தமிழில் தகுதிமிக்கது என முழங்கவைத்தது. இவற்றையெல்லாம் ஆய்ந்து, சமூகநீதி காத்த வீராங்கனை புரட்சித் தலைவி அவர்கள், காயிதெமில்லத் அவர்களின் பெயரில் மாவட்டம், நெடுஞ்சாலை, கல்லூரி எனப் பாமாலை சூட்டிக் கௌரவித்துக் கொண்டிருக்கிறார். பாதொடுக்கத் தமிழுண்டு, பைந்தமிழில் இனிமை உண்டு, யார்க்கும் இங்கு வீரமுண்டு. யானை பலம் எமக்கு உண்டு. வேற்றுமையில் ஒற்றுமை. வேதனையில் சாதனையும் நீக்கமற இணைந்ததுவே நெஞ்சினிக்கும் பாரதம் என முழங்கியவர் காயிதெமில்லத் ஆவார்கள்" என்றார்.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் பேசும்போது கூறியதாவது:

"கண்ணியத் தென்றல் காயிதெமில்லத் நூற்றாண்டு விழா புதுக்கோட்டை மாவட்டத்தில் கோட்டைப்பட்டினத்தில் தான் நடக்கவேண்டுமெனப் புரட்சித்தலைவி விரும்பினார். அவர் விருப்பத்தைப்போல அவர் எண்ணியதைப்போல விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. கோட்டைப்பட்டினத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லையென்று அறிந்தவுடன் அதற்காக ரூ.35 இலட்சம் ஒதுக்கி குடிநீர் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். அனைத்துத் தொகுதிகளையும் தனது சொந்தத் தொகுதிபோல் கருதி அதன் தேவைகளை உடன் நிறைவேற்றுபவர் நமது முதல்வர். எந்த நாட்டிலும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு எல்லா மதத்தினரும் இந்தத் தமிழகத்தில் தான், அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். எந்த ஒரு திட்டம் தீட்டினாலும், அதன் பலன் ஏழை எளிய மக்களின் தேவைகளை அறிந்து உடன் நிறைவேற்றுபவர். நமது தமிழகத்தைப் பார்த்துதான் வேறு மாநில முதல்வர்கள் பல திட்டங்களைத் தீட்டுகிறார்கள் என்பதை வெளிநாட்டவரும் கவனித்து வருகிறார்கள்" என்றார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஜீனத் சர்புதீன், திரு சி. குழந்தைவேலு, திரு எஸ். சண்முகநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

முன்னதாக 'மனிதப் புனிதர் காயிதெமில்லத்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கவிஞர் இளந்தேவன், பேராசிரியர் கே.எம். காதர், நாகூர், இசட் ஜபருல்லா, தஜம்முல் முகமது, பேராசிரியர் அப்துல் கறீம் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.




# மதுரை மாவட்ட அலங்காநல்லூரில் பெரியாறு வைகை - பேரணை இணைப்புக் கால்வாய்த் திட்டத் தொடக்க விழா!

மதுரை மாவட்டத்தில் வைகை அணையிலிருந்து பேரணை வரை சுமார் 32 கி.மீ. நீளமுள்ள இணைப்புக் கால் வாய் சுமார் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

நீர் வளத்தைச் சிக்கனமாக வும், சீராகவும் பயன்படுத்தப் பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இக்கால்வாய் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் குறைகளை அகற்றிடவும், நீர் ஆதாரத்தை முழுமையாகப் பயன்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆலோசனை மற்றும் உத்தரவின் பெயரில் உலக வங்கியின் நிதி யுதவியுடன் 1991-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இத்திட்டத்தின் தொடக்க

விழா, 13.8.95 அன்று மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு அ.மா. பரமசிவன் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில் கூறியதாவது: "ஏழை விவசாயிகளின் நலனைப் பெரிதும் போற்றிப் பாதுகாப்பதிலும், துயர்களை உடன் துடைப்பதிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நிகர் அவரே! 1987-ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் தொடக்கிய இத்திட்டத்தினை 1995-இல் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நிறைவேற்றியுள்ளார்" என்றார்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் தமது விழாப் பேருரையில் கூறியதாவது:

"போதிய நிதியாதாரம் இல்லாத போதிலும், மக்களுக்குப் பலன் தரும் எந்த ஒரு திட்டத்தையும் உலக வங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் உதவியுடன் நிறைவேற்றுவதில் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவிக்கு நிகர் அவரே. தமிழ்நாட்டில் புதிய நீர் ஆதாரங்களுக்கான வாய்ப்பும், நிலத்தடி நீர் குறைவதையும் கருத்தில் கொண்டு, நாட்டின் அனைத்து நீர்வள ஆதாரங்களை நிலைப்படுத்தும் வகையில், சுமார் ரூ.1,200 கோடி உலக வங்கியின் நிதியுதவியில் விரைவில் தொடங்கப்பட்டு ஏழு ஆண்டுகளில் முடிக்கப்படவுள்ளது. மேலும் ரூ.12 கோடியில் கண்மாய் மற்றும் கால்வாய்களைச் சீரமைக்கும் பணியும் விரைவில் தொடங்கப்படவுள்ளது. உசிலம்பட்டியில் 58 கால்வாய்த் திட்டம், 61 கிராமக் கண்மாய்த் திட்டமாக 28 கோடி ரூபாயிலும், போடிப் பகுதி மக்களுக்கு ரூ.13.5 கோடியில் 18 கால்வாய்த் திட்டத்தினையும் இப்படிப் பல நலத்திட்டங்களை அடுத்து வரும் சந்ததியினரின் நலங்களைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்" என்றார்.

## இத்திட்டத்தின் பயன்கள்

1991-ஆம் ஆண்டு உலக வங்கி நிதியுதவியுடன் இப்பணி துவங்கப்பட்டு 1995-ஆம் ஆண்டு முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

தடுப்பு அணையிலிருந்து பேரணைவரை சுமார் 32 கி.மீ. தூரம் முழுவதுமாகப் பக்கவாட்டிலும் தரை மட்டத்திலும் புதிய கான்கிரிட் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளதால், நீரின் வேகம் 16 மணி நேரத்திலிருந்து 5 மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

10 சதவிகிதம் நீர் உறிஞ்சப்படுவது முழுமையான அளவில்

## பொன்மொழிகள்

☆ மனிதனுக்குள் ஏற்கெனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.

– சுவாமி விவேகானந்தர்

ஆண்கள் மரங்கள். பெண்கள் அந்த மரத்தை ஆதாரமாக, கொழு கொம்பாகச் சுற்றிப் படரும் கொடிகள். குழந்தைகள் அந்தக் கொடிகளில் குலுங்கி ஆடும் நறுமண மலர்கள்.

– இங்கர்சால்



# ஒற்றுமை காப்போம்!

**அ**ந்நியர்கள் நம் மண்ணில், முதன் முதலில் காலெடுத்து வைத்துக்கட்டிய இக்கோட்டையின் கொத்தளத்தில், நம் விடுதலைக் கொடி இன்று பட்டொளி வீசிப் பறப்பது, நம் சுதந்திரத்தின் மகிமையை உல குக்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

விடுதலை நாள் விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில், அதற்கு வித்திட்டவர்களின் தியாகங்களைப் பெருமையோடு நினைவுகூர்வது நம் கடமையாகும்.

எனவே, தாய்த்திரு நாட்டின் விடுதலைக்காகத் தம் உயிர், உடல் உடைமைகளை ஈந்த பல்லாயிரக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் எனது வீர வணக்கத்தை அஞ்சலியாக்குகிறேன்.

இந்திய நாட்டில் அமைந்திருந்த நூற்றுக்கணக்கான சிற்றரசுகள் தமது பெருமைகளை மறந்து, தங்களுக்குள் சண்டையிடுவதையே வாடிக்கையாகக் கொண்டிருந்ததால் தான், தேசிய உணர்வு அவர்களிடமிருந்து விடைபெற்று வெகுதூரம் சென்றுவிட்ட நிலையில், அடிமை வாழ்வு நாம் அழைக்காமலேயே குடியேறியது; நமது சுய மரியாதையையே அடித்து வீழ்த்தியது.

இந்தப் படிப்பினை நமது நினைவில் இன்றும் நிலைத்திருப்பதால்தான் பல்வேறு மொழியினர், வெவ்வேறு இனத்தவர் நிறைந்து வாழும் நிலையிலும், நாம் பெருமையோடு உலக அரங்கில் மிகப் பெரிய மக்களாட்சி எனும் மாட்சிமையோடு தலை நிமிர்ந்து நிற்கிறோம். இப்பெருமையை நாம் ஒவ்வொருவரும் என்றென்றும் கட்டிக் காக்கவேண்டும் என்று உறுதி கொள்ளவேண்டும் என்பதை இவ்வேளையில் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

**— புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-1-லிருந்து.**

---

தடுக்கப்பட்டுவிட்டதால் கடை மடைப் பகுதிகளுக்கும் ஒரே நாளில் தண்ணீர் சென்றடை வதால், இதுநாள் வரை ஒரு போகம் சாகுபடி செய்து வந்த விவசாயப் பெருமக்கள் இனி மேல் இருபோகம் விவசாயம் செய்ய ஏதுவாகிறது.

"திருமங்கலப் பிரதான கால்வாய் மூலம் பலன் பெறும் விவசாயிகளுக்கும் பலனளிக்கும் வகையில், பேரணையின் மத குக்கு முன்புறம் வைகை ஆற்றின் குறுக்கே தரைமட்டத் திற்குச் சுமார் 6 மீட்டருக்குக் கீழ் 2 மி.விட்டமுள்ள சுமார் ரூ.4 கோடியில் கான்கிரிட் சுரங்கம் அமைத்து அதன்மூலம் நீர் கொண்டு செல்லப்படுகிறது.

"மஞ்சளாறு வராக நதி மற்றும் கிளை ஆறுகளைக் கடக்கும் இடத்தில் இணைப்புக் கால்வாய் மேல் தொட்டிப் பாலம் மூலம் கொண்டு செல்லும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது.

"இக்கால்வாயின் இருபுறங் களிலும் உள்ள சுமார் 60 கிராமத்தைச் சேர்ந்த கிராம மக்களுக்குப் பயன்பெறும் வகை யில் 13 நடைபாலங்களும் 17 வண்டிப் பாலங்களும் அமைக் கப்பட்டுள்ளன.

"இத்திட்டத்தின் மூலம் சுமார் 56,940 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், பாசனப் பரப்பில் நெல் உற்பத்தித்திறன் ஒரு எக்டேருக்கு 3 டன்னிலிருந்து 6 டன்னாக உயர்ந்துள்ளது.

"நீர் விரையம் முற்றிலுமாகக் குறைக்கப்பட்டுள்ளதால் புதி தாகப் பெரியகுளம் திண்டுக்கல் அண்ணா மாவட்டம் நிலக் கோட்டையைச் சார்ந்த சுமார் 4,000 ஏக்கர் கூடுதலாகப் பாசன வசதி ஏற்பட்டுள்ளது".

**-மு.பா. அன்புச்சோழன்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
மதுரை மாவட்டம்.



# தூரம் நேரம் சுருக்கிடுவோம்

—கவிஞர் மனசை ப. கீரன்

இருக்கும் இடத்தே இருந்துகொண்டே
எடுக்க, தொழில்கள் ஆற்றிடவே
சுருக்காய் வேலை முடித்திடவே
தோன்றிப் பல்கும் "ரோபோ"க்கள்!

நடக்கும் போதும் தொலைதகவல்
நமது சட்டைப் பைகளிலே
கிடக்கும் கருவி செய்திகளைக்
கேட்டுக் கொடுக்கும் "பேஜர்"தான்!

உலகின் எந்த மூலையிலும்
ஒளிரும் நிகழ்ச்சி நம்கூடம்
நலமே காட்டும் தொலைக்காட்சி!
நடத்திக் காட்டும் கணிப்பொறிகள்!

நோக்கப் படங்கள், கணக்குகளும்
நொடியில் போட்டுக் காட்டிவிடும்
காக்கக் கோடி தகவல்கள்
காலம் காலம் காத்தளிக்கும்!

தொலைவு காலம் உலகினிலே
சுருக்கும் நுணுக்க அறிவியல்கள்
'மலையோ'! என்று மலைத்தல்போல்
வகையாய் வழங்கும் கற்பகமே!

காசி, கடல்கள் தாண்டுவதும்
கருதின் முடிவே, என்றார்கள்!
ஊசி நுனிபோல் கணிப்பொறிகள்
உடனே முடிக்கும் அறிவியல்கள்!



# தெரிந்து கொள்ளுங்கள்!

## அமெரிக்கா


இதற்குப் புது உலகம் என்று பெயர். சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்புவரை இக்கண்டத்தைப்பற்றி ஐரோப்பியருக்கு ஒன்றும் தெரியாது. இதைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான மைல் தொலைவு கடல் சூழ்ந்து நிற்பதுதான் இதற்குக் காரணம். கடலில் மேற்குத் திசையில் சென்று இந்தியாவுக்கு வழி காண முயன்ற கொலம்பஸ், அமெரிக்காவின் கரையைக் கண்டபோது தாம் இந்தியாவைக் கண்டுபிடித்துவிட்டதாக நினைத்தார். 'அமெரிக்கஸ் வெஸ்ப்பூசியஸ்' என்ற இத்தாலிய நாடாய்வாளர் இது ஒரு புது உலகம் என்று கண்டார். இவரைப் பாராட்டும் வகையில் இக்கண்டம் அமெரிக்கா என்றே வழங்கி வருகின்றது.

அமெரிக்காக் கண்டம் இரண்டு பெரிய நிலப்பரப்புக்களைக் கொண்டது. ஒன்று வட அமெரிக்கா, மற்றொன்று தென் அமெரிக்கா; கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், மெக்சிக்கோ ஆகிய மூன்று பெரிய நாடுகள் வட அமெரிக்காவில் உள்ளன. மெக்சிக்கோவிற்குத் தெற்கு ஏழு சிறிய நாடுகள் உள்ளன. இவை இருக்கும் பகுதியை மத்திய அமெரிக்கா என்றும் சொல்லுவதுண்டு.என்றாலும், இது வட அமெரிக்காவின் ஒரு பகுதிதான். தென் அமெரிக்காவில் 13 நாடுகள் உள்ளன.

வட அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய பகுதிகளைப் பனாமா என்னும் ஒரு சிறிய பூசந்தி இணைக்கிறது. இரண்டு பகுதிகளிலும் பெரிய பெரிய மலைகளும், ஆறுகளும் உண்டு. சில இடங்களில் காடுகள் செழித்து ஓங்கி வளர்ந்துள்ளன. உலகத்தில் மிகச் செழிப்பான கண்டம் அமெரிக்காதான். நிலக்கரியும், இரும்பும், பெட்ரோலியம் எண்ணையும், வேறு தாதுப்பொருள்களும் ஏராளமாகக் கிடைக்கின்றன.

ஐரோப்பியர் சென்று குடியேறுவதற்கு முன்பே இங்குப் பழங்குடி மக்கள் பலர் வாழ்ந்து வந்தார்கள். அவர்களை அமெரிக்க இந்தியர்கள் என்று சொல்வார்கள்.

கனடாவிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பெரும்பாலோர் பேசும் மொழி ஆங்கிலம். கனடாவில் குவிபெக் பகுதியில் பிரெஞ்சு மொழி பேசுவோர் அதிகம். மற்ற நாடுகளில் அதிகமாகப் போர்ச்சுக்கீசிய மொழியும், ஸ்பானிய மொழியும், பிரெஞ்சு மொழியும் வழங்குகின்றன.



# 'பிரமிட் கோபுரம்' என்றால் என்ன?

**ப**ண்டைய எகிப்து, கிறிஸ்துவுக்குச்சற்றேறக் குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நிலையானதோர் ஐக்கிய அரசாங்கத்தை நிறுவி கி.மு. ஆறாம் நூற்றாண்டு வரையில் தனிச் சுதந்திர நாடாக வாழ்ந்து வந்தது. இன்று நாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் நாகரிக வாழ்க்கையின் பல துறைகளிலும் அது சிறப்புற்று விளங்கியது. இந் நீண்ட கால அற்புத வரலாற்றில் பேரோக்கள் எனப் பெயர் பெற்ற மாமன்னர்கள் அதனை ஆண்டு வந்தனர். நாட்டின் நலனுக்கான காரியங்கள் பல செய்தும் நல்லாட்சி வழங்கியும் வந்த அவர்களை மக்கள் தேவர்களெனப் போற்றி வந்தனர். மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டிருந்த அவர்கள், தம் மன்னர்கள் இறந்த பின்னரும் தொடர்ந்து பெருமையுடனும் பாதுகாப்புடனும் அழியாமலும் இருக்க வேண்டுமென விரும்பினர்.

உடலில் 'கா' எனும் இரண்டாம் உயிர் ஒன்று குடி கொண்டிருந்தது என்றும், உடல் அழிந்தாலும் அது அழிவதில்லை என்றும், ஆகவே, உயிர்போன பிறகும் உடலை அழியாமல் பாதுகாப்பது நலமென்றும் அவர்கள் கருதினர்.

உடல் அழியாதிருக்கும் பொருட்டு மருந்தூட்டி அதைப் பாதுகாத்தனர். இங்ஙனமாக மன்னரின் உடலைப் பாதுகாக்கவே பிரமிட் எனும் பிரம்மாண்டமான சமாதிகளைக் கட்டினர். இச்சமாதிகள் அல்லது கல்லறைகள் பிரமிட் உருவில், அதாவது பட்டைக் கூம்பு உருவில், அமைந்திருப்பதால் 'பிரமிட்' என்றழைக்கப்படுகின்றன. பிரமிட் அடி சதுரமானது. நான்கு பக்கங்களும் முக்கோண வடிவுடையன. அவை உச்சியில் ஒன்று சேர்வன.

எகிப்திய மொழியில் 'பிரமிட்' என்ற சொல்லுக்கு 'விண்ணேறுவதற்கான இடம்' என்ற பொருள் உண்டு.

பிரமிட் எகிப்திய மக்களின் நம்பிக்கையினின்றும் எழுந்தது. அவர்கள் தம் ராஜ்ஜியத்திற்கு நிலைபேறும் திடநிலையும் உறுதியும் அளிக்கப் பேரவாக் கொண்டனர். அவர்களை ஆண்ட பேரோ மன்னன் தேசீய வாழ்வில் கண்கூடான உருவம். அவனது சடலம் கொண்ட பிரமிட் தமக்கும் தம் மன்னருக்கும் அமரத் தன்மையை உத்தரவாதம் அளிக்கிறது. இதுவே பிரமிட்டின் உட்கருத்து.

எகிப்தில் இன்றும் காணப்படும் மிகப் பழைய பிரமிட்டைச் சகாராவில் அமைத்தவன் ஜோசர் எனப்படும் பெருமன்னன். இவன் மூன்றாவது அரச வம்சப் பரம்பரையைச் சேர்ந்தவன். அவன் படிவரிசையில் அமைத்துக் கட்டிய பிரமிட் உலகிலேயே மிகப் பழைய கற்கட்டடமாகும். உலகக் கட்டடக் கலையின் ஆரம்பத்தையே இங்கு காணலாம். ஒரு பெரிய நினைவுச் சின்னத்தைக் கற்களில் அமைக்க மானிடன் செய்த முதல் முயற்சி இது.

**நன்றி: 'மன்னர் தளகர்த்தர்' என்னும் நூலில், திரு. ப. கோதண்டராமன்.**

### அறிவியல் கண்டுபிடிப்புகள்

- ஸ்காட்லாந்தைச் சேர்ந்த கிரிக் பாட்ரிக் மாக்மில்லன் என்பவர் *1839* -ஆம் ஆண்டு மிதிவண்டியைக் கண்டு பிடித்தார்.
- இங்கிலாந்தைச் சேர்ந்த பெய்ர்டு என்பவர் *1926* -ஆம் ஆண்டு (TELEVISION) தொலைக்காட்சிப் பெட்டியைக் கண்டு பிடித்தார்.
- பிரிட்டனைச் சேர்ந்த சுருகியர் என்பவர் *1824* -ஆம் ஆண்டு முதன் முதலாக மின்காந்தம் (ELECTRIC MAGNET) கண்டு பிடித்தார்.
- பிரான்சு நாட்டைச் சேர்ந்த தின்மானியர் என்பவர் *1830*-ஆம் ஆண்டு தையல் பொறியைக் கண்டு பிடித்தார்.
- ஜெர்மனியைச் சேர்ந்த சோகன் குட்டன் பெர்க் *1445*-ஆம் ஆண்டு, முதல் அச்சுப் பொறியைக் கண்டு பிடித்தார்.
- பிரிட்டனைச் சேர்ந்த முனைவர் ஆலன் எம். டியூரிங் *1824* ஆம் ஆண்டு முதல் கணிணியைக் (COMPUTER) கண்டு பிடித்தார்.

# கணினிக்கு ஏற்ற தமிழ்!

– சுஜாதா

கணிணியியலைப் பற்றிச் சொல்ல எனக்கு என்ன தகுதியிருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம். நான் 10,12 ஆண்டுகளாகக் கணிப்பொறியைப் பற்றித் தமிழில் எழுதும் எழுத்துக்களுக்கெல்லாம், எழுதும் கட்டுரை, கவிதை, கதைகள் எல்லாவற்றுக்கும் கணிப்பொறியைப் பயன்படுத்தி வருகிறேன். அந்த ஒரு விதத்தில் எனக்கு லேசான தகுதியிருக்கிறது.


கணிணிக்கு ஏற்ற மொழி தமிழ் மொழி என்பதில் சற்றேனும் ஐயமில்லை. இதற்கு முக்கியமான காரணம், அந்த எழுத்தில் எண்ணிக்கைகள் குறைவு; கூட்டெழுத்துக்கள் இல்லை. நேராக வரிக்கு மேலும் கீழும் விசித்திரக் கிரீடங்களும் தொங்கல்களும் இல்லாமல் எழுதப்படும் மொழி அது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த இலத்தீன் கிரேக்க மொழிகள், சமஸ்கிருத மொழிகள் வழக்கொழிந்து விட்டபோது தமிழ் மட்டும் இன்று பேசப்படுவதற்கு முக்கியமான காரணம் அதன் வரி வடிவத்திலும் இலக்கண விதிகளிலும் உள்ள எளிமைதான் என்று எண்ணத் தோன்றுகிறது.

தமிழில் எழுத்துக்கள் குறைவு என்று சொன்னார்கள். அதாவது ஒரே ஒரு 'க' தான் இருக்கிறது. ஒரே ஒரு 'ச' தான் இருக்கிறது என்று கிண்டல் செய்வார்கள். என்னப்பா இது ஒரே ஒரு 'க'வை வைத்துக்கொண்டு 'கா(K)ந்தி' என்றாலும், 'கா(G)ந்தி' என்றாலும் ஒரேமாதிரி எழுதுகிறீர்கள் என்று நான் பெங்களூரில் இருந்தபோது கேட்டார்கள்.

இப்படிப் பார்க்கிறபோது கணிப்பொறி ஆக்கத்திற்குப் பார்க்கிறபோது, கணிப்பொறியில் விசைப் பலகையில் எல்லா எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்களும் அடங்கிவிட்டு இன்னும் நிறைய மிச்சம் இருக்கிறது. புதிய எழுத்துக்களுக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டு பழமையான ஒரு மொழி இன்றைய கணித இயலுக்குத் தகுந்தாற்போல் இருப்பதே ஒரு மிகப் பெரிய ஆச்சரியம்!

தமிழுக்கும் கணிணிக்கும் உள்ள தொடர்புகள் எழுதுவதிலேயே தொடங்கிவிட்டன.

'டிசிஎம்' என்னும் நிறுவனம் இந்தி மொழிச் சொல் தொகுப்புக்கு வகை செய்கிறது. சொல் தொகுப்பு என்பது WordProces என்று சொல்லுவார்கள். அதாவது சொல் தொகுப்புச் சாதனம் என்பது சொல்லாக்கத்திற்கு நாம் பயன்படுத்துகிற ஒரு கருவி. அதை: அச்சடிக்கவும் முதற் பயிற்சிகள் செய்யத் தமிழில் திருவள்ளுவர் என்கிற மென்பொருளைக் கொண்டுவந்து மென்பொருள் என்பதற்கு 'சாப்ட் வேர்' (Software) என்று பொருள். மெல்லினம் என்று கூட சொல்லலாம்.



மென்பொருள் என்பதை சாப்ட்வேருக்குப் பயன்படுத்து கிறோம். மென்பொருளைக் கொண்டு திருவள்ளுவர் பிர பலம் அடையாததற்குக் காரணம், அப்போதைய கணிப்பொறிகள் அதிகவிலை என்பதுதான். தொடர்ந்து பாண்டிச்சேரி, பெங்களூர் போன்ற நகரங் களில், தனியார் நிறுவனங்கள் தமிழில் மென்பொருள் சொல் தொகுப்பு உருவாக்கின.

பாண்டிச்சேரியில்'ஆரோவில்' 'Awroville' என்ற சொல்லைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஜெனித் நிறுவனமும் பெங்களூரில் எஸ்.ஆர்.ஜி. நிறு வனமும் இதன் முன்னோடிகள். இவர்கள் அனைவரும் பி.சி. என்னும் சொந்தச் சிறு கணிணி மூலம்- பி.சி. என்பது பர்சனல் கம்ப்யூட்டர் . சிறு கணிணி மூலம் தமிழ்மொழி எழுத்துக்களை உள்ளீட்டு திரையில் எழுதி, திருத்தி அச்சிடும் 'மேசைப் பிரசுரம்' (Desk of Publication) செய்வதற்குண்டான நிரல்கள் நிமித்தம் சாப்ட்வேர் ஆகிறது.

Programme என்று சொல் லாம். உண்டான நிரல்களைத் தான் அமைத்தார்கள். மேசைக் கணிணியின் விலை குறையக் குறைய இவைகள் தொடர்பான சாதனங்களைப் பத்திரிகை நிறுவனங்களிலும், பள்ளி களிலும் பயன்படுத்தினார்கள்.

மேற்படிப்புக்காக வெளிநாடு சென்ற தமிழர்கள் பலர் அங்கே தத்தம் தமிழ் ஆர்வங் களைப் புதுப்பிக்கும்வகை யில் திருக்குறள், சிலப்பதி காரம் போன்ற வைகளைக் கணிப்பொறிக்குள் நுழைத்து மகிழ்ந்தனர்.

இவ்வகையில் நல்ல எண்ணத் துடன் தொடங்கிய பல முயற் சிகள் ஆர்வமடங்கியதும் முடங் கிப் போயின. இதற்கு முக்கியக் காரணம் ஆராய்ச்சியாளர் களையும், ஆர்வலர்களையும் ஒருங்கிணைத்து வழிநடத்த ஒரு தனிப்பட்ட அமைப்பில்லாதது. தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம், பற்பல அண்டை மாநிலப் பல்கலைக் கழகங்கள், இவைகளின் தமிழ் ஆராய்ச்சிப் பிரிவுகள் மேலை நாட்டின் பல்கலைக்கழகங் களில் கீழ்த்திசை மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள் தனிப் பட்ட ஆர்வலர்கள் அனைவரும் தனித் தனித் தீவுகளாக இயங்கியதால்தான் அவர்கள் முயற்சிகள் எல்லாம் கடலில் பெய்த மழையாகிறது;

இந்த மாநாட்டுக்கு ஆயிரக் கணக்கான தமிழர்கள் வந்திருக் கிறார்கள். அவர்களில் பலருடன் நான் பேசியபோது எதைக் கேட்டாலும் 'ஓ, அதுவா? அதை நான் அப்போதே செய்து விட்டேன்!' என்று கூறு கிறார்கள். ஒரு நண்பர் வந்தார். கையில் 'லேப் டாப்' என்னும் மடிப்பினை எடுத்துவந்தார். அதில் திருக் குறள் முழுவதையும், நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம் முழுவதை யும் அமைத்து எந்த ஒரு வார்த்தை கொடுத்தாலும் அந்த வார்த்தைக்குப் பொருளிலோ பிரபஞ்சத்திலோ எத்தனை முறை எந்தப் பாடல்கள் வந்துள் ளன என்று உடனே திரையில் தமிழ்காட்டும் நிரலில் எழுதி யுள்ளது. அருமையான முயற்சி.

தமிழ் நூல்கள் அனைத் திற்கும் தகவல் தளம் அமைத் தால் ஆராய்ச்சிக்கு மிகவும் பயன்படும். இதிலுள்ள ஒரே ஒரு குறை தமிழை அதனுள் செலுத்தும்போது ஆங்கிலம் போல் உச்சரிக்க வேண்டும். தமிழ் என்றால் 'டிஏஎம்ஐஇசெட்' என்று அடியுங்கள் என் கிறார்கள்.

இப்படிச் செய்திருப்பதற்கு முக்கியக் காரணம், அவர் சொன்னது அமெரிக்காவில் தமிழ் தெரியாத பிள்ளைகள் ஆங்கிலம் கற்க உதவும் என்ற விநோதமான காரணம் அது. கண் எதிரிலேயே 'டிஏஎம்ஐஇசட்' என்று எழுதிப் படித்தால் தமிழ் என்று தெரிகிறது. அதை அடையாளம் கண்டுபிடிக்க முடிகிறது. எப்படி வடிவம் பரீட்சயம் இல்லாது காண முடியும் என்று புரியவில்லை.

அவரிடம் நான் ஒரே ஒரு கேள்விகேட்டேன். சிங்கப்பூரில் நா. கோவிந்தசாமி என்கிற ஆராய்ச்சியாளர் மாய்ந்து மாய்ந்து 27 தமிழ் எழுத்தாளர் களின் 25,372 உயிர் மெய் ஒலிகளைத் தற்காலிக உரை நடை இலக்கியத்தை அலசி, புழக்கத்தை ஆராய்ந்து, 'Frequency'ஐ இடது கையில் முக்கிய விரல்களில் அதிகம் புழங்கும் எழுத்துக்கள்

★ **எல்லோருக்கும் உதவி செய்து கொண்டி ருப்பது முடியாத காரியம். ஆனால், உதவி செய்கிறமாதிரி பேசலாமில்லையா!**

**—வால்ட்டேர்**

வருமாறு மிக எளிய முறையில் ஒரு 'கீ போர்டு' அமைத்திருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான பள்ளிகள்- 200 பள்ளிகளிலும் சிங்கப்பூரில் பயன்படுத்துகிறார்கள்.

பள்ளிகளில் பயன்படுத்து கிறார்களே அது தெரியுமா என்று கேட்டதற்கு கோவிந்த சாமியார் யார் என்று கேட்டார்கள். அன்பர்களே, உத்திரவாதமாகச் சொல்வேன், இன்று எத்தனைப் பேர் தமிழ் கணிணி ஆராய்ச்சி செய்கிறார் களோ அத்தனை விசைப்பலகை இட ஒதுக்கம் - கீ போர்டு லொகேஷன்ஸ் என்று சொல் வார்கள். அத்தனை விசைப் பலகைகள் இட ஒதுக்கம் உள்ளது. இதை ஆங்கிலத்தில் எண்ணிப் பார்க்கும்போது, மிக அபத்தமாக இருக்கிறது.

தஞ்சாவூரில் ஏ.எஸ்.டி.எப்., திருச்சியில் பி.எஸ்.டி.எப்., அல்லது பி.டி.எஸ்.எப். என்று ஒவ்வொரு இடத்திலேயும் அந்த டைப்ரைட்டருடைய லே போர்டு மாறினால்? அதைப்போல ஒரு குழப்பம் தற்காலக் கணிணி இயலில் எந்த விசைப்பலகை ஒதுக்கீட்டையும் செயல்படுத்த ஒரு நாளில் முடியும். ஆனால் இதில் மிக முக்கியம், அனை வரும் ஒருவிசைப்பலகை இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்க வேண்டி யதுதான்.

அனைவரும் ஒரு விசைப்பலகை இடஒதுக்கீட் டை -எதுவாயிருந்தாலும் பரவாயில்லை- கடைப் பிடிக்கவேண்டியது. இதில் நேர விரயம் தவிர்க்கப்படும். திரு. நா. கோவிந்தசாமியின் கணிணி விசைப்பலகையை நான் மிகவும் உற்சாகத்துடன் பரிந்துரைக்கிறேன். ஆறு மணி நேரத்தில் பழகிவிடும்படியான ஒரு மின்பொருள் அதற்கு எழுதியிருக்கிறார். தானே சொல்லித்தரும்- "கையைத் தவறாக வைக்கிறீர்கள்" என்று அதுவே சொல்லித் தரும். கொஞ்சம் திட்டக்கூட திட்டும்!

இதிலிருந்து மைய அரசின் மின்னணு இயலே டிபார்ட் மெண்ட் ஆப் எலக்ட்ரானிக்ஸ் கொண்டுவந்திருக்கும். இன்ஸ்கீ சங்கேதத்திற்கு அல்லது உலகின் அனைத்து மொழிகளையும் அடக்கவல்ல யூனிகோர்டு என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். 64 பிட்லே வந்துவிட்டு, உலகத் திலுள்ள அத்தனை மொழிகளை யும் ஒரு கோடு கொடுத்திருக் கிறார்கள். அந்த சங்கேதத்திற்கு மாற்றிக்கொள்ளும் இடைநிலை காரியத்தைக் கணிணிக்குள் மென்பொருள்ஆக எழுதிச் செயல்படுத்த முடியும். விசைப் பலகை ஒதுக்கீடு என்பது இந்த இயலுக்கு நுழைவாயில் போல இதில் குழப்பம் வைக்கவே கூடாது. அறிவியலில் தமிழ் அறிவியல் வளரவேண்டுமென் றால், கணிணி விசைப்பலகை யில் எல்லோரும் ஒரு விசைப் பலகையைக் கடைப்பிடிப்பது மிகவும் முக்கியம்.

இப்போது ஒவ்வொரு பத்திரிகை அலுவலகத்திலும், ஒவ்வொரு கணிப்பொறிகளைப் பயன்படுத்துகிறார்கள். தட்டச்சு இயந்திரத்தின் விசைப்பலகை ஒதுக்கீடு, மற்றொரு இடத்திற்குப் போனால் அந்த ஒதுக்கீடே இருக்காது. மறுபடியும் நான் எழுதின கதை கட்டுரைகளை மீண்டும் மீண்டும் திரும்பத் திரும்ப அவர்கள் அச்சடித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

இந்த மாநாட்டில் விசைப் பலகை ஒதுக்கீட்டிற்கு ஒரு முடிவு கண்டால் அந்த ஒரு சாதனையே போதும். அடுத்து, தமிழில் சொல் தொகுப்புச் சாதனங்கள். சொல் பகுப்புச் சாதனங்கள். வேர்டு ப்ராஸஸர்ஸ். இவைகளிலும் பலவகைப் பட்டன - நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுகின்றன. வசதிகள் மாறுகின்றன. அவை களை இயக்கும் விசைகள் மாறுகின்றன. இது தவிர்க்க இயலாது.

இருப்பினும் ஒரு சொல் தொகுப்பு மென்பொருள், கணிப்பொறிக்கு உள்ளே செலுத்தப்பட்ட அந்த முயற்சி வீணாக்காமல் அதே மற்றொரு சொல் தொகுப்பு மின்பொருள் ஏற்றுக்கொள்ளுமாறு அவை களிடையே பரிமாற்றக் குறி யீடுகள் இண்டர்மீடியேட்டரி எக்ஸ்சேஞ்ச் என்று சொல்வார்கள். நிலைநிறுத்துமாறு நம் மிடம் சொல்தொகுப்பு விற்கும் நிறுவனங்களிடம் உத்திரவாதம்பெற வேண் டும். விதவிதமான சொல் தொகுப்புச் சாதனங்கள்

---

★ **மற்றவர்களின் உழைப்புக் காரணமாகத் தான் நாம் நல்லபடி உயிர்வாழ்கிறோம் என்பதை ஒரு நாளைக்கு நூறு தடவை நான் ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.**

**–ஐன்ஸ்டைன்**

இருக்கிறது. அவைகளுக்குள்ளே பரிமாற்றங்களுக்குண்டான குறி யீடுகளை நீங்கள் ஒரு சொல் தொகுப்பில் உள்ளிட்ட தமிழ் எழுத்துக்கள் மீண்டும் மற்றொரு சொல் தொகுப்புச் சாதனத்தைப் பயன்படுத்தும்போது, மீண்டும் அவைகளை அச்சடிக்க வேண்டி யதில்லை. இன்று திருநெல் வேலியிலே தயாரிக்கப்பட்ட தகவலை சென்னையில் ஏற்கும்போது, மீண்டும் கணிணிக்குள் ஆரம்பத்திலிருந்து செலுத்துவதுபோன்ற வீணாண காரியங்களைத் தவிர்க்க வேண்டும்.

தமிழ் எழுத்துக்கள் அனைத் திற்கும் கணிணியில் குறியீடுகள் உள்ளன. இது ஆதாரமான விஷயம். இது இன்றி இந்த முறை இல்லை. ஆயினும் இது எந்த அளவில் ஒருமைப் படுத்தப்பட்டுள்ளது. ஸ்டேண்டர் டைசேஷன் என்பதைக் கணிப் பொறியியல் அறிந்த குழு ஆராய்ந்து பரிந்துரைக்க வேண்டும்.

இதெல்லாம் அவர்கள் சமாச் சாரம் என்று ஒதுக்கிவிட முடி யாது. எழுத்துக்களையும் வார்த் தைகளையும் கணிப்பொறிக்குள் நுழைத்துவிட்டோம். அவை களை அதன் காந்தத் தகடுகளில் ஞாபக அடுக்குகளிலும் எழுதி விட்டோம். இன்றைய சூழ் நிலையில் தமிழ்மொழியில் அத்தனை இலக்கியங்களையும் இன்றைய தேதி வரையில் எழுதப்பட்ட தமிழ்மொழியில் எழுதப்பட்ட அத்தனை இலக் கியங்களையும் அத்தனைப் பத்திரிகைகளையும், அத்தனை வார்த்தைகளையும் சி.டி.ராம்

**அறிவை நம்புங்கள் அப்போதுதான் விஞ்ஞான அற்புதங்களையெல்லாம் நம்மால் செய்யமுடியும்!**

**–தந்தை பெரியார்**

போன்ற லேசர் தகடுகளில் எழுதிவிட முடியும்.

பழந்தமிழ் இலக்கியத்தின் அத்தனை நூல்களையும், நாட்டுப்புறப் பாடல்களையும், பக்திப் பாடல்களையும், சித்தர் பாடல்களையும் காப்பாற்ற வேண்டியது நம் கடமை. இதில் விருப்பு வெறுப்பு வேண்டாம். சுல் சங்க நூலா, பக்தி நூலா அல்லது சித்த மருத்துவமா என்பதுப் பற்றிக் கவலையே இல்லை. தமிழில் நம்மிடம் இருக்கும் அனைத்து இலக்கியங் களையும் காப்பாற்றி அவைகள் அனைத்தையும் இந்த அறைக் குள் அடைத்துவிட முடியும். இது சர்வதேச நெட் வொர்க். கலைப் பொறி வளையத்தில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்த பிரம்மாண்டமான தகவல் தளத்தைத் தகவல் வெள்ளம் என்று சொல் கிறார்கள். அல்லது செய்திக் கடல் என்றுகூட சொல்லு கிறார்கள். இதை அடையாளம் காட்ட அவைகளை வகைப் படுத்த ஒரு எளிய முறை கொண்டுவரவேண்டும்.

தகவல் தளங்களைச் சேர்த்து வைக்க அரசு அரட்டு இன்ப மிக்ஸ் போன்ற பல்வேறு மென் பொருள்கள் இருப்பினும் அவை களின் வசதிகளைப் பயன் படுத்தி ஒருங்கிணைந்த ஓர் அடையாள முறை வகுக்க வேண்டும். உதாரணமாக சங்கம் என்றால் ஒன்று. ஒன்று ஒன்று என்றால் புறநானூறு. ஒன்று, இரண்டு என்றால் ஐங்குறு நூறு. ஒன்று, இரண்டு, மூன்று என்றால் ஐங்குறு நூற்றில் மூன்றாவது பாடல். இதில் ஏதாவதுஒன்று நூலக இய லாளர்கள் லைப்பரரி சயனிட்ஸ் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இந்தத் தமிழ்த் தகவல் கடலைப் பயனுற ஆராய்வ தற்கோ, படித்து மகிழ்வதற்கோ டே ஆப் பேஸ் தகவல்கள் மின் தகவல் தளங்கள் அனைத்தையும் தனக்குள் பரிமாறிக்கொள்ளும் இடைநிலைக் குறையீடுகளை ஒருங்கிணைந்துவிட்டால், மற்ற வசதிகளை டேட் ஆப் பேஸ் கவனித்துக் கொள்ளும். ஆனால், இவைகளின் பிரண்ட் எய்ட் லூசர் என்ற பேஸ். முன் அமைப்பு தமிழில் இருப்பது நலம்.

இந்தத் தருணத்தில் தமிழில் சீ.கோபால்ட் போன்ற கணிப் பொறி மொழிகளும், தாஸ் போன்ற மின் பொருள்களும் அவைகளின் தமிழ் வடிவம் வேண்டுமா என்று அறிஞர்கள் யோசித்து முடிவு காண வேண் டும். இன்று ஜப்பான், சீனா நாடுகளுக்குச் சென்றால் நவீன, கணிப்பொறி மின்பொருள்கள் அனைத்தும் அவரவர் மொழி யிலேயே திரையில் தெரியும். சி போன்ற மொழிகளைப் பயன் படுத்தும் போது அவர்களின் மொழிகளில் ஆதார ஆணை களை ஆங்கிலத்தில் வைத்துக் கொண்டு கமண்ட்ஸ் எனும் விளக்கக் குறிப்புகளைத் தத்தமது

மொழிகளில் வைத்துக் கொள்கிறார்கள். இது ஒரு முறை. இந்த முறையை நாமும் ஏற்கலாம்.

அதுவும் வேண்டாம்- முழுதும் மொழி என்றால் சில எளிய கணிப்பொறிகளில நூறு வார்த்தைகளுக்கு டு வொயில் பிரிண்ட் பார் நெக்ஸ்ட் போன்றவற்றிற்கு ஈடான தமிழ்ச் சொற்களைத் தீர்மானித்து, அனைவரும் அதே சொற்களைப் பயன்படுத்த வேண்டும். இந்த கணிப்பொறி என்ற வார்த்தையைப் பொறுத்து எவ்வளவு குழப்பங்கள் வருகின்றன என்றால் கணணி என்கிறார்கள். கணிப்பொறி என்கிறார்கள். கணிப்பான் என்கிறார்கள். ஒரு நாள் பேராசிரியர் நன்னன் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது கணிப்பொறி என்பது தப்பு. அலைகடல் மாதிரி அது. கணிப்பொறி என்பதில் அந்தப் பகர ஒற்றுக் கூடாது என்றார். ஒரே குழப்பம் எல்லாவற்றிற்கும். எல்லோரும் சேர்ந்து கணிப்பொறி என்றால், அது ஒரு மற்றொரு ஓசை. அதைப்பற்றி நாம் உணர்ச்சி வசப்பட வேண்டியதே இல்லை. தஞ்சாவூரிலும், கணிப்பொறி, திருச்சியிலும் கணிப்பொறி, சென்னையிலும் கணிப்பொறி அதுதான் நமக்குத் தேவை.

தஞ்சாவூரில் கணிணி, இதில் கணிப்பான், அதில் கணிமம். இன்னும் ஒரு பன்னிரண்டு வார்த்தைகள் என்னால் சொல்ல முடியும். மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றக் கூடாது. கல்பாக்கம் சீனிவாசன் சில வார்த்தைகளைப் பரிந்துரைத்திருக்கிறார். நல்ல கட்டுரைகளை எழுதியிருக்கிறார். கணிப்பொறிக்குள்ளே சென்றால், ஆங்கிலம் இல்லை, தமிழ் இல்லை, குஜராத்தி இல்லை, எல்லாம் பயனறி. அதற்கு மொழி உணர்ச்சி இல்லை. அது அன்னை கன்னித் தமிழ் என்றெல்லாம் சொல்லாது. கணிப்பொறி தமிழில் அத்தனை இலக்கியங்களையும் பத்திரமாகச் சேர்த்துவிட முடியும். அது தான் முதற்கண் முக்கியமான காரியம்.

2000 ஆண்டுளாக எழுதப்பட்ட அத்தனை நூல்களையும் அவைகளின் இலக்கியத் தரத்தைப் பற்றியோ- அது பக்தியோ அல்லது எவ்வகையான இலக்கியம் என்பதைப் பற்றியோ கவலைப்படாமல் அந்தத் தகவல் தளத்தை அதற்குள் செலுத்த வேண்டியது மிக முக்கியம். அவைகளை நாம் ஆராய்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் அனுபவ இன்பத்திற்கும் ஏற்றவாறு, மிக அதிவேகத்தில் அவைகளைத் திரைக்குக் கொண்டு வந்து அவைகளைப் பயன்படுத்த முடியும். அதோடு காரியம் முடிவதில்லை.

இதுவரை கணிப்பொறி செய்ததை எல்லாம் அந்த இயந்திரத்தைத் தமிழுக்கு எவ்வாறு மின் பொருளிலும் சில சமயம் வன் பொருளிலும் மாற்றுவது தமிழுக்கு ஏற்றவாறு. ஆனால் கணிணியில் சகல வசதிகளையும் தமிழுக்காகப் பயன்படுத்த கணிணிக்குத் தமிழ் தமிழ்யைக் கற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கு முதலில் அதற்கு, கணிப்பொறிக்கு இலக்கணம் போதிக்க வேண்டும். நம் இலக்கணத்தின் விதிகளைக் கணிப்பொறியின் பார்வையிலிருந்து இருவகையாகப் பிரிக்கலாம். எழுத்தறிவு, மொழியறிவு என்று. நம் இலக்கண விதிகள் அனைத்திலும் இவைகள் இரண்டும் கலந்திருக்கின்றன.

உதாரணம் ஆல், ஒடு, உடன் மூன்றாம் வேற்றுமை உருபு. இது ஒரு விதி. இது எழுத்தறிவு. ஆனால் பெயர் எச்சம், வினை எச்சம் என்பது மொழியறிவு. எது பெயர்ச்சொல் எது வினைச் சொல் என்று கணிப்பொறியைக் கேட்காதீர்கள். கணிப்பொறிக்குத் தெரியாது. அது மொழி அறிவு ஆகிறது. கணிப்பொறிக்கு எழுத்தறிவு கொடுப்பது எளிது. மொழியறிவு கஷ்டம். மொழியறிவு சம்பந்தப்பட்ட இலக்கண அறிவுகளைக் கம்ப்யூட்டர் கற்க வேண்டும் என்றால் அந்த விதிகளைக் கணிப்பொறிக்கு ஏற்ப எழுதவேண்டும்.

இந்த மன்றத்தில் கூடியிருக்கும் அறிஞர்களிடத்தில் ஒரு கோரிக்கை வைக்கிறேன். கணிப்பொறியாளர்களுக்கு ஒரு புத்தகம் தேவைப்படுகிறது. ஒரு புதிய புத்தகம் நீங்கள் எழுத வேண்டும். அதன் பொருள் விளக்கத்தை மட்டும் தருகிறேன். மற்றதெல்லாம் நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். புத்த

**ஆண்மைக்கழகு அகிம்சை. அதைப் பற்றிக் கோழைக்குத் தெரியாது!**

**—அண்ணல் காந்தியடிகள்**

கத்தின் தலைப்பு 'இன்றைய தமிழ்' அல்லது 'நாளைய தமிழ்' என்று வைத்துக்கொள்ளலாம். கணிணியியலுக்காக அடைப்புக் குறிப்புகள் முதல் பகுதி இலக்கண விதிகள். நன்னூல் சூத்திரங்கள் அல்ல; தெளிவாகக் கணிணி ஆக்கத்திற்கேற்ப எளிதாகத் திரும்ப எழுதப்பட்ட விதிகள். அதே விதிகள் தான்.

இலக்கணம் எழுதும் போது இலக்கண விதிகளையும், விவரங்களையும் குறிக்க வேண்டும். இந்த சூத்திரங்களில் உள்ள கணிணப் பண்புகளை அடையாளம் காட்டும் வகையில் இருக்கவேண்டும்.

உதாரணமாக, இந்த், அந்த, வந்த, எந்த, அப்படி, எப்படி, இப்படி போன்றவற்றின் முன் வல்லெழுத்து மிகும். இந்தப் புத்தகம், அந்தப் பெண என்பதுபோல கணிணியியல் எழுதிச் செயல்படுத்தலாம். உயிர் முன் க,ச,த,ப வந்தால் இரட்டிக்கும். இவைகளெல்லாம் விதிகள். ஆனால் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும், உயிர் உயிர், உயிர்மெய், மெய் மெய், மெய் உயிர் என்று நால்வகையாய் உணர்வதாகும் என்பது ஒரு நன்னூல் சட்டம் இருக்கிறது.

இது கணிப்பொறிக்குத் தேவையேயில்லை. இது விதி இல்லை. ஒரு விவரம். புணர்ச்சியியலை வர்ணிக்கிறது. இது கணிப்பொறிக்குத் தேவையில்லை. இவ்வாறு விதிகளைத் தனிப்படுத்தி, எழுதப்பட்ட ஒரு இலக்கணப் புத்தகம் தற்காலத் தமிழ் இலக்கணம் என்பது எழுதப்படவேண்டும். அடுத்து பெயர்ச் சொல், வினைச் சொல், உரிச்சொல், பெயர் உரை, வினைஉரை, என்ற சொற்களைக் குறிப்பிடும் அகராதித் தேவை.

இதற்கு ஒரு நல்ல உதாரணம் கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. ஆனால் ஏனோ உரிச்சொற்கள் அதில் குறிப்பிடப் படவில்லை. எதெல்லாம் பிற மொழிச் சொற்கள் எனவும் விவரமும் தரும் அகராதி வேண்டும். ஏனென்றால், பிற மொழிச் சொற்களுக்கு - வட மொழிச் சொற்களுக்குத் தமிழில் இலக்கண விதிகள் மாறுபட்டது. சங்க காலம் என்பதில் தகர ஒற்று வராது. அதற்கு முக்கியக் காரணம் சங்கமம் என்பதும், காலம் என்பதும் சமஸ்கிருத வார்த்தைகள் என்கிறார்கள். பிற பொருள், பிறமொழிச் சொற்களுக்கு விதிகள் வேறானது.

நிகண்டு பற்றி எல்லாரும் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஒரு சொல் பல பொருள், பல பொருள் ஒரு சொல் என்று நம்மிடையேயிருக்கும் மிக அருமையான நிகண்டுகள் இருக்கின்றன. பழைய நிகண்டு நமக்கும் தெரியும் கணிப்பொறி நிகண்டு. எப்படிப்பட்ட நிகண்டு எதற்காகத் தேவை என்பதைச் சொல்கிறேன். பழைய நிகண்டுகள் எல்லாம் அது தோன்றிய காலத்திலேயிருந்து இவ்வாறான பயனுக்கென்று ஆக்கப்பட்டவை அல்ல.

அகராதி நிகண்டு என்று ஒருவர்தான் எழுதியிருக்கிறார். மற்றவையெல்லாம் கட்டளை, கருத்துரைபோன்ற சிக்கலான செய்யுள் வடிவத்திலிருக்கின்றன. கணிப்பொறியாளர்களுக்குத் தேவை கிரசாரஸ் என்று சொல்வார்கள். ஒவ்வொரு சொல்லுக்கும் மாற்றுச் சொற்கள் ஒன்றிரண்டாவது உண்டு. இதனால் என்ன பயன்?

ஆங்கிலச் சொல் தொகுப்பு மென்பொருட்கள் ஸ்பெல் செக், ஸ்டைல் செக் என்ற வசதிகள் உள்ளன. எழுத்துப் பிழைகளை நீக்க ஸ்பெல் செக். திரும்பத் திரும்ப ஒரு சொல்லைப் பயன்படுத்தினால் அவற்றிற்கு மாற்றுச் சொற்களைப் பயன்படுத்த ஸ்டைல் செக். சென்னையில் மொழி அறக்கட்டளையில் ஸ்பெல் செக் முயற்சி இப்போது கவனிக்கத்தக்கது. அவர்கள் ஓசைப்படாமல் ஒரு புரட்சியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறு பிழை திருத்தவும்,

**★ துக்கமாக இருக்கும்போது அதைப் பகிர்ந்து கொள்ள எவரும் தேவையில்லை. ஆனால், சந்தோஷமாக இருக்கும்போது அதைப் பகிர்ந்து கொள்ள ஒருவர் இருந்தால், அந்தச் சந்தோஷம் இரட்டிப்பாகிறது.**

***—மார்க் ட்வெயின்***

நடையைத் திருத்தவும் ஒரு கணிப்பொறி தேவைப்படுகிறது. தமிழ் எழுத்துக்களில் கணிப் பொறிகளை அடையாளம் கண்டுகொண்டு கணிப்பொறி யால் தமிழைப் படிக்கமுடியும். அவைகளை எழுத்துக்களாக்கி வார்த்தைகளாக உச்சரிக்கவும் இயலும். அதற்கான வன் பொருள் மென்பொருள் சாதனங்களை ஓ.சி.ஆர். என் பார்கள். ஆப்டிகல் கேரக்டர் ரிகனிஷன்.

அவைகளுக்குத் தமிழ் எழுத் துக்கள் தனித்தனியே எழுதப் படுவதும் சில தெளிவான குழப்ப நீக்க விதிகள் இருப்பதும் பெரும்பேறு என்றே சொல்ல லாம். இப்போது கலைச்சொல் அமைப்பில் மிக முக்கியமான சங்கதிகளைச் சொல்ல விரும்பு கிறேன். பழைய நிகண்டுகளில் உள்ள வழக்கொழிந்த சொற் களை மீண்டும் பயன்படுத் தலாம். புதிய கலைச்சொற்கள் உண்டாக்குவதற்குண்டான ஆதார விதிகளைப் பற்றி இங்கே சொன் னார்கள். அட்டோனிஸன். ரூல்ஸ் என்று. அதாவது பட்ஜெட், பட்ஜெட்டரி, பட்ஜெட் கண்ட்ரோல் என்று அந்த மாதிரி அட்டோனிஸன் அது ஒட்ட வைக்கும் விதி. அந்த விதிகளை நாம் ஜப்பான், ஜெர்மானிய ஆங்கில உதாரணங்களிலிருந்து அமைக்கலாம்.

கலைச் சொற்களைப் பற்றி உணர்ச்சிவசப்படக்கூடாது. எல் லோரும் ஒரே கலைச் சொற்களைப் பயன்படுத்துவது முக்கியக் குறிக்கோளாகி அதற் கென்றே ஒரு வாரியம் தனியாக அமைக்கலாம். தமிழில் சொற்கள் இல்லை, என்பவர் களைப் பொருட்படுத்தத் தேவை யில்லை. அக்லூடினேஷன் இல்லை என்று சொல்ப வர்களை நம்பாதீர்கள். ஆனால் கலைச் சொல் ஆக்கத்திற்கு- கல்வியமைச்சர் இங்கே இருக் கிறார். அவரிடம் தமிழில் கலைச் சொல் ஆக்க வாரியம் ஒன்றை அமைக்க வேண்டுகிறேன். அவர்கள் பரிந்துரைக்கும் பயன் படுத்தும் கலைச் சொற்களைத் தான் எல்லோரும் எல்லா எழுத்தாளர்களும் பயன்படுத்த வேண்டுமென்கிற ஒரு விதி வகுக்கலாம். இவ்வாறு செய்தால் என்ன நிகழும்? என்று சொல்லி விட்டு முடிவைத் தெரிவிக் கலாம்.

நான் ஒரு விஞ்ஞானக் கதை எழுத்தாளர். இவை அனைத் தையும் செய்தால் அடுத்த உலகத் தமிழ் மாநாட்டில் – எப்போது வரும்? மூன்று ஆண்டு, இரண்டு ஆண்டு – அடுத்த உலகத் தமிழ் மாநாட்டில் உத்தரவாதமாகக் கீழ்க்காணும்படி நிகழும்...

இப்படிச் செய்தால்? கையெழுத்திடப்பட்ட ஒரு கடிதம் வருகிறது. பையன் சிங்கப்பூரில் இருக்கிறான் அவன் எழுதுகிறான். 'அன்புள்ள அப்பா வணக்கம். தாயாருக்கு என் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் கடிதத்தைப் பார்த்து மகிழ்ந்தேன். தாங்கள் அனுப்பிய ரூ.300 பெற்றுக்கொண்டேன். நூல்கள் வாங்கிவிட்டு பாக்கி ரூபாயை, ரூ.பத்து ரூபாயை உணவு விடுதிக்குச் செலுத்தி விட்டேன்' இந்த மாதிரி ஒரு கடிதம் வந்தது.

இந்தக் கடிதத்திற்கு ஒரு ஒளி வருடி- ஸ்கேனர், அதில் கொடுத் தால் ஒரு விதமான பொருளில் அது அந்தக் கடிதத்தை எனக்குப் படித்துக் காட்டும். எனக்குச் சோம்பேறித்தனமாக இருந்தால் அது ஒரு மிஷின் பொருளில் நல்ல தமிழில் நல்ல உச்சரிப் புடன் ஆதாரமான ஒரு சராசரி தமிழினை உச்சரிக்கும். மெட்ராஸ் தமிழில், 'என்ன வாத்தியாரே' என்றெல்லாம் பேசாது. இதை ஒரு ஒளி வருடி மூலம் ஸ்கேனர் என்ற மிஷன் பொருளில் படித்துக் காட்டும்.

படித்துக் காட்டுவது மட்டு மல்லாமல், இந்தக் கடிதத்தில் சில பிழைகள் இருக்கின்றன. அதை ஒவ்வொன்றாகத் திருத் தலாம். பிழைத் திருத்தமும் செய்யலாம். 'அன்புள்ள' என் பதை அன்பான அப்பாவிற்காக என்று இரண்டு வரிகள் வந்திருக்கிறது. இரண்டாவது முறை அன்பார்ந்த என்று பயன்படுத்தியிருக்கலாம் என்று சொல்லும். பாக்கி என்ற ஒரு வார்த்தை எனக்குப் பிடிக்க வில்லை, அதற்குப் பதிலாக

**எது அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை.**

*—சுவாமி விவேகானந்தர்*

# சென்னை மாநகராட்சியின் தீவிரத் துப்புரவுப்பணி முகாம்

எழில்மிகு சென்னை 2000 திட்டத்தின்கீழ், சென்னை மாநகராட்சியின் அனைத்துக் கோட்டங்களிலும் ஒவ்வொரு பிரிவாகத் தீவிரத் துப்புரவு மற்றும் சுகாதாரப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ், மண்டலம் 3,6 மற்றும் 9 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாநகராட்சி இயந்திரப் பொறியியல் துறை, துப்புரவுத்துறை, மருத்துவப் பிரிவு, மலேரியாப் பிரிவு, மழைநீர் வடிகால் துறை முதலிய துறையின் தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் ஒருங்கிணைந்து தெருக்களில் குப்பைகளை அப்புறப்படுத்துதல், சாலை ஓரங்களில் உள்ள கட்டட இடிபொருட்களை அப்புறப்படுத்துதல், கொசு மருந்து தெளித்தல், கொசு மருந்து புகை போடுதல், தெருவிளக்குகளைப் பழுதுபார்த்து அனைத்து தெருவிளக்குகளையும் எரிய வைத்தல், மழைநீர் வடிகால் கால்வாய்களில் தூர் வாருதல் போன்ற பணிகள், மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு மருத்துவ முகாம் நடத்தி இரத்தப் பரிசோதனை, பொதுப்பரிசோதனை, மலேரியா பரிசோதனை போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டன. இதற்கென மாநகராட்சி மருத்துவர்கள் அடங்கிய குழு செயல்பட்டது.

---

மிச்சம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாமா என்று கேட்கும். இவ்வாறாகப் பிழை திருத்தம் செய்து உன் மகனின் எழுத்து மிக மோசமாக இருக்கிறது. அதை அச்சடித்துக் கொடுக்கவா என்று அச்சடித்துக் கொடுக்கும். வேண்டுமென்றால் ஒரு பெண் குரலிலும் அது வாசித்துக் காட்டும்.

எனக்கு மகளே இல்லை; ஒரு மகள் என்று தீர்மானிக்க வேண்டுமென்றால் பெண் குரலிலும் வாசித்துக் காட்டும். தமிழில் அத்தனை இலக்கியங்களிலேயும் இந்த மாதிரியான வசதி ஏற்படும். தமிழில் அத்தகைய இலக்கியங்களையும் தமிழில் அன்றுவரை எழுதப்பட்ட, அந்த அடுத்த நாடு வரை எழுதப்பட்ட, அத்தனை இலக்கியங்களையும்... தகடுகளில் பத்துத் தகடுகள் வரும். செய்தியாளர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று பிரமிப்பாக இருக்கும். அப்படியே எழுதிக்கொண்டு அவைகளை உலகெங்கும் விநியோகிக்கலாம்.

திருக்குறளில் 11,597 சொற்கள் உள்ளன. அதில் 4,888 வெவ்வேறு சொற்கள் ரிபீட்டட். வள்ளுவரின் ஹை டோக்கல் ரேஸியோ என்று எழுத்தாளர்கள் சொல்வர். ஹை டோக் என்றால் சொல் நடை-சொல் வளம். வள்ளுவரைப் பொறுத்தவரையில் அது 4,215. அந்த மாதிரியான ஒரு ஸ்டேட்மெண்ட் பண்ணலாம்.

இந்த மாதிரியாக ஒரு சந்திப் பிழைகள் இலக்கணப் பிழைகள் பெரிய 'ற' சின்ன 'ர' போன்றவற்றைப் பற்றிக் கவலைப்படாது. விசைப்பலகை மூலம் விரைவில் மிக விரைவில் தமிழை உள்ளீட்டால் அல்லது தமிழ் வார்த்தைகளைப் பேசினால் கணிப்பொறி வேகமாக இயங்கி திரையிலிருந்து எழுத்துக்களாகத் தோன்றும். நல்ல காலம். சுயமாகக் கதை கவிதைகள் மட்டும் எழுத முடியாது. என் போன்ற எழுத்தாளர்களின் பிழைப்பைக் கெடுக்கக் கூடாது. மற்ற அனைத்து ஆராய்ச்சியாளர்களையும் இடம் பெயர்த்துவிடும்.

அடுத்த தமிழ் மாநாட்டில்-மேடையில் ஒரே ஒரு கணிப்பொறி மட்டும் மனித வடிவத்தில் நின்றுகொண்டிருக்கும். நன்றி வணக்கம்.

# பொது விஞ்ஞானம்

**திரு. முத்துக்கருப்பன்**
**துணை வேந்தர்**
**பாரதிதாசன் பல்கலைக் கழகம்**

**த**மிழ் உயர்தனிச் செம்மொழி. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் உயிர்ப்புடன் விளங்கும் ஒருசில மொழிகளில் தமிழும் ஒன்று. ஒரு தலைமுறையின் கலாச்சாரத்தை அடுத்த தலைமுறைக்காகத் தாங்கி நிற்கும் கருவூலமாகத் திகழ்ந்து வந்துள்ளது நமது தமிழ் மொழி.

இன்று அறிவியல் தமிழ் வளர்ச்சி பற்றிப் பெரிதும் எண்ணி வருகிறோம். நம் முன்னோர்கள் அறிவியல் தொழில் நுட்பத் துறைகளிலே தம் பெருமையை நிலைநாட்டியதை நாம் நன்கு அறிவோம். அவர்கள் அறிவியலில் சிந்தனை வளத்தோடு திகழ்ந்தார்கள் என்பதற்கு இந்தத் தஞ்சைத் தரணியிலே நம் கண்முன்னே வானளாவ நிற்கும் தஞ்சைப் பெரிய கோயிலே ஒரு எடுத்துக்காட்டு. தமிழரின் கட்டடக் கலை, சிற்பக் கலை, நீரியல் துறை, வேளாண்மைத் துறை, சித்த மருத்துவத் துறை என்ற நுட்பங்களையெல்லாம் இன்று நாம் கண்கூடாகக் கண்டு மகிழ்கின்றோம். ஆகவே, வளம் பெற்ற தமிழ் மொழி அறிவியல் நுணுக்கங்களை விளக்கவல்ல மொழியாகும்.

எந்த ஒரு செய்தியையும் நாம் உணரவும், அறியவும் முக்கியமான கருவியாக இருப்பது மொழி. எனவே, தாய்மொழியான தமிழ் மூலம் அறிவியலைக் கற்கும் வாய்ப்பை நம் மாணவர்கள் பெற வேண்டும். தாய்மொழியில் அறிவியல் கல்வியே சிறந்தது. அதுதான் ஒரு மாணவன் நல்ல முறையில் படிக்க, புரிந்து கொள்ள, சிந்தனையோடு செயலாற்றவைக்கும் திறன் உடையது.

ஆகையால், மற்ற பல நாடுகளில் உள்ளதுபோல் தமிழ் மொழியில் அறிவியலைப் பயிற்றுவிக்க வேண்டும் என்பது நமது அரசாங்கத்தின் கொள்கை. நமது தமிழ் மொழி இன்றைய அறிவியல் வாழ்விற்கும், பொது அறிவியலின் வளர்ச்சி வேகத்திற்கும் ஈடுகொடுத்து, நல் உலகின் மேம்பாட்டிற்கு ஏற்ற கருவியாக அது மாறி பயன் தர வேண்டும் என்பதே நம் எல்லோருடைய விருப்பம்.

இன்றைக்கு மாறிவரும் வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் அடித்தளமாய் அமைந்து இருப்பது பொது அறிவியல் ஆகும்.

அன்றாடம் புதுப்புது அறிவியல் சிந்தனைகளும், சித்தாந்தங்களும், சோதனைகளும், சாதனைகளும், இவை படைக்கும் சாதனங்களும் பல்கிப் பெருகி வருகின்றன. மேலும், அறிவியல் மிகுந்த வேகத்துடன் வளர்ந்து வருவதால் அதன் தாக்கம் அன்றாட வாழ்விலும், கல்வித் துறையிலும் வேளாண்மைத் துறையிலும், மருத்துவத்திலும், தொழில் வளத்திலும், நாட்டின் பொருளாதாரத்திலும் மிகவும் அதிகம் ஆகும்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் நிகழும் பொது அறிவியல் வளர்ச்சியினை நாம் அறிந்து பயன்பெற வேண்டும். இந்த அறிவியல் தமிழ் வளர்ச்சியை முற்றிலும் அடைய மூன்று வகையாகச் செயல்படலாம். ஒன்று பொது மக்களின் தேவைக்கேற்ற அறிவியல் தமிழ். பொது மக்கள் உடல் நலம் பேணவும், கால்நடை மற்றும் உழவுத் தொழில் சிறப்பு அடையவும், சுற்றுப்புறச் சூழல் மேன்மை அடையவும், தொழில் நுட்பம் பெருகவும், பொது அறிவியலைத் தெரிந்து கொள்ளவும் ஏற்ற வகையில் மக்களுக்குப் புரியும் தமிழில் தர வேண்டும். இதில் ஓரளவு வெற்றி கண்

டுள்ளோம் என்றே சொல்ல வேண்டும்.

வானொலி, தொலைக் காட்சி, நாளேடுகள், வார இதழ்கள் மூலம் அறிவியலின் முன்னேற்றத்தை மக்கள் பெறுகிறார்கள். இதில் இன்னும் வளர்ச்சி அடையப் பல வழி வகைகள் உண்டு. நம் சமுதாய வளர்ச்சிக்குத் தமிழ் அறிஞர் களும், அறிவியல் அறிஞர்களும் நிறையவே செய்யவேண்டி உள்ளது.

இரண்டாவதாக, இளங்கலை, முதுகலை வகுப்புகளில் பொது அறிவியல் பாடங்களைத் தமிழில் பயிற்றுவித்தல்.

நம் அரசாங்கத்தின் ஆதர வுடன், பாடத் திட்டங்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பே கல்லூரி களில் கொண்டுவரப்பட்டுள் ளன. பல கலைச்சொல்லாக்கக் கருத்தரங்கங்களும் நடை பெற்றுள்ளன. இன்னும் நடை பெற்றுவருகின்றன. அறிவியல் தமிழ் அகராதிகள் வெளிவந்துள் ளன. மேலும், மாணவர்களுக்கு அறிவியலைத் தமிழில் கற்பிக் கவும், தேர்வுகளை எழுதவும் வாய்ப்புக்கள் அளிக்கப் பட்டுள்ளன. இருப்பினும், தமிழ் வழிக் கல்வி பாடத்திட்டத்தில் விரும்பிச் சேரும் மாணவர்கள் குறைவு.

வெளியிடப்பட்ட ஆயிரக் கணக்கான அறிவியல் பாட நூல்கள் எதிர்பார்த்த அளவுக் குப் பயன்படுத்தப்படவில்லை. தமிழ் மொழிப் பற்று இருந் தாலும் தமிழில் அறிவியலைக் கற்க ஆர்வம் இருந்தபோதிலும், இந்த நிலைக்குக் காரணம் என்ன என்று கண்டறிய வேண்டும்.

மூன்றாவதாக, தமிழ் மொழி யில் அறிவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளை, முனைவர் பட்டய ஆய்வுகளைச் சமர்ப் பித்தல். இது மூன்றாவது நிலை வளர்ச்சி ஆகும்.

பாரதிதாசன் பல்கலைக் கழகம், கலைப்புலத்தில் - Faculty of Arts முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழில் அளிப் பதற்கு வழிவகை செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப் பிடலாம்.

அறிவியலில் கலைச் சொல் லாக்கம் மிக இன்றியமையாதது ஆகும். சில அறிவியல் பெயர்கள், சொற்கள், குறியீடுகள் மொழி வேறுபாடின்றி மாற்றம் இல்லாமல் பயன்படுத்தப்பட வேண்டும். அம்மாதிரி சொற் களை மொழிபெயர்ப்பது தகவல் பரிமாற்றத்திற்கு உகந்தது அல்ல. எடுத்துக்காட்டாக . மீட்டர், ஆம்பியர், ஓம் போன்ற சொற் களைக் குறிப்பிடலாம். லேசர், டி.என்.ஏ. எயிட்ஸ் போன்ற இடுகுறியீடு சொற்களும் உண்டு. சில பரிணாமத்தைக் குறிக்கும் எழுத்துக்களும், குறியீடுகளும் உண்டு. இம்மாதிரியான சொற் களை மொழிபெயர்ப்பது சிறப்பு ஆகாது. சில சொற்களை ஒலி மாற்றம் செய்து பயன்படுத் தலாம். சிலவற்றை அப்படியே பயன்படுத்தலாம்.

நிகண்டுகளையும், இலக்கியங் களையும் இக்கோணத்தில் பரி சீலனை செய்யலாம். இதற்கு ஒரு தகுந்த டேடா பேஸ் சொற் களின் தொகுப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். ஆங்கிலச் சொற் களை மொழி பெயர்க்கும்போது பொது விதிகளையும் வழக்கு களையும் தெரிந்து செயல்படுதல் வேண்டும். சில முன் ஒற்றுகளையும் (பிரிபிக்ஸ்) சில பின் ஒற்றுகளையும் (சபிக்ஸ்) முன்னரே பயன்படுத்தப்பட்டு இருக்கக்கூடும் மைக்ரோப் என்னும் சொல் நுண்ணுயிர் என்று வழக்கில் இருந்தால், மைக்ரோ வேவை நுண்ணலை எனக் கூறலாம்.

ஆங்கிலச் சொற்களில் பல இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிகளிலிருந்து வந்தவை. அவற்றை மேம்போக்கான முறையில் மொழிபெயர்த்தால் காலப்போக்கில் அச்சொற் களின் பயன்பாடு முடக்கப் பட்டுவிடும். ஆக்கத்திறன் என்ற பொருள்கொண்ட இன்ஜினி யரிஸ் என்ற இலத்தீன் சொல்லி லிருந்து இன்ஜினியரிங் என்ற சொல் பிறந்துள்ளது. என் ஜினைச் சார்ந்த இன்ஜினியரிங் என்று நினைத்து, பொறியியல் என மொழிபெயர்த்தோம்.

**காலத்திற்காகத்தான் கருத்துக்கள்; கருத்து களுக்காகக் காலமல்ல. காலத்திற்கேற்பக் கருத்துக்களை மாற்ற வேண்டும்; காலத்திற்கு ஒவ்வாத கருத்துக்களை ஒதுக்கித் தள்ள வேண்டும்.**

**- அறிஞர் அண்ணா**



பொறிகள் பயன்படுத்தப்படாத பொறியியலை என்ன என்று கூறுவோம்?

எடுத்துக்காட்டாக, சேப்டி என்ஜினியரிங்.

இக்கருத்தரங்கின் தலைவர் பேராசிரியர் குழந்தைசாமி அவர்களுடைய நூலில் இக் கருத்துக்களை விரிவாக தெளிவு படுத்தியுள்ளார்கள்.

என்னுடைய ஆராய்ச்சித் துறையில் இம்மியூனிட்டி தடுப்பாற்றல் என்றும், இம் மியூனாலஜி தடுப்பாற்றலியல் என்றும் கொள்ளலாம். நோய்த் தடுப்பாற்றலியல் என்று கூறு வது இவ்வியலின் விளக்கம் ஆகும். 'லிம்போசைட்டை' வெள்ளை அணுக்கள் என் கிறோம். ஆனால், இது வெள்ளை அணுக்களில் ஒரு வகையாகும். தடுப்பாற்றலுக்கு ஒரு முக்கிய உறுப்பு தைமஸ் ஆகும். இதைத் தைமஸ் என்று கூறுவதே எளிதாகும்.

பயோ டெக்னாலஜியைத் தொழில் நுட்ப உயிரியல் என்றும், மாலிக்யுலர் பயோ லெஜியை மூலக்கூறு உயிரியல் என்றும் கூறுகிறோம்.

ஆனால், இன்னும் குறுகிய அளவிலான கலைச் சொற் களைக் கண்டறிவது நலமாகும். அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குக் கீழே குறிப்பிடும் வகையில் ஆவன செய்யவேண்டுமென்று வேண்டு கிறேன்.

ஒன்று – கலைச் சொற்கள் சுருக்கமாக, சிறப்பானதாக இருக்கவேண்டும். ஆங்கில கிரேக்க அடிப்படையை உணர்த் தும் வகையில் இருப்பது பல மாற்று அல்லது கூட்டுச் சொற்கள் அமைய ஏதுவாகும். இரண்டாவதாக, கலைச் சொற்கள் தமிழ் இலக்கியம் சார்ந்ததாக – பழக்கத்தில் இருப்பதாக இருந்தால் நல்லது. மக்களின் நடைமுறை வழக் கத்தில் இயல்பு கொண்டதாக இருத்தல்வேண்டும். எடுத்துக் காட்டாக, பல்கலைக்கழகம், வானொலி கோப்பு, புலம், துறை, இயற்பியல் வானியல், வானிலை, மணித்துளி, நேர் முகத் தேர்வு, விலங்கியல், சுற்றுச் சூழல் உயிரியல் போன்ற சொற்கள் நன்கு பழக்கத்தில் இருந்துவருகின்றன.

மூன்றாவதாக, படைக்கப் பட்ட புதிய கலைச் சொல் அதற்கு உண்டான எல்லாப் பொருளையும் பெறச்செய்ய வேண்டும். அந்தச் சொற்களைத் தனியாகப் பார்த்தால், அவற் றுள் அடங்கிய பொருள் அனைத்தையும் புரிந்துகொள்ள இயலாது. அந்தச் சொல்லை அடக்கிய சொற்றொடர் அமைப் பில் எடுத்துக்காட்டி, பழக்கத் திற்குக் கொண்டுவந்து, மக்களை ஏற்கச் செய்யவேண்டும்.

திரும்பத் திரும்ப அந்தச் சொல் ஒரு குறிப்பிட்ட பொரு ளுடன் பழக்கத்திற்கு வந்தால் தான், அறிவியல் தமிழாகவும் சிறப்பாகவும் இருக்கும். இப்பொழுது பண்டைய தமிழ் இலக்கியங்களுக்கு Data base எனப்படும் செய்தித் தொகுப்பு அமைக்கப்பட்டு வருகிறது.

அதேபோல், அறிவியல் கலைச் சொற்களுக்கு ஒரு சிறந்த கம்ப்யூட்டர் சாப்ட்வேர், கணிணி மொழி அல்லது சுஜாதா அவர்கள் சொன்னது போல், மென்பொருள் வழியாக ஒரு செய்தித் தொகுப்பு அமைக்கப் படவேண்டும்.

நான்காவதாக, அறிவியல் அறிஞர்களும், தமிழறிஞர்களும் கொண்டிருக்கிற ஒரு மைய அமைப்பின் மூலம் கலைச் சொற்களை ஒருங்கிணைத்து பொதுப்படையான வழக்கத் திற்குக் கொண்டுவரச் செய்ய வேண்டும்.

ஐந்தாவதாக, அறிவியல் உண்மைக் கருத்தை அத்துறை வல்லுநர்கள் நன்கு அறிவார்கள். இருப்பினும் அறிவியல் தமிழின் வளர்ச்சி அறிவியல் மற்றும் தமிழறிஞர்கள் கூட்டுமுயற்சி யால் சிறப்புறும் என்பது என் கருத்து. அறிவியல் அறிந்த தமிழ் நுட்பர்களும், தமிழ் அறிந்த அறிவியல் அறிஞர்களும் சேர்ந்து செயலாற்றவேண்டும். எதனை யும் ஒத்த நோக்கோடு ஒருங் கிணைத்துக் காணும் சிறந்த மனப்பாங்கு வேண்டும். அது போல், இவ்விரு துறைப் பாடங் களையும் சேர்த்து பயிற்று விக்கக்கூடிய பட்டப்படிப்பும் அமைத்திடுதல் வேண்டும். இவ் வாறு பலருடைய ஒத்துழைப் புடன் அறிவியல் தமிழ் மேலும் வளர்ச்சி அடைய ஆவன செய்ய வேண்டும்.

**(தஞ்சையில் நடைபெற்ற 8-ஆம் உலகத் தமிழ் மாநாட் டில் ஆற்றிய உரையிலிருந்து).**



# நாமக்கல் கவிஞர்

கவிஞர்
பொன்னடியான்

**மாண்புமிகு முதல்வர்க்கு**

எட்டா உச்சியில் இருந்த தமிழ் அமுதை
எல்லா மக்கள் கைக்கும் எட்ட
ஏழை மக்களும் எடுத்து உண்ண
எட்டாம் உலகத் தமிழ் மாநாடு கண்டாய்;
தன்னிகரில்லாத் தனிப் புகழோடு
தலை நிமிர்ந்து நின்ற தஞ்சைக் கோயிலும்
தன்னடக்கத்தோடு
தலை குனிந்துகொண்டதாம்! ஏன்?
உன்புகழ் அதனினும் உயர்ந்து விட்டதாம்.
சோழ வளநாடு சோறுடைத்து என்ற
சுந்தரச் சொல்லும் உயிர் பெற்றுவிட்டதாம்;
சோழ ராஜன், ராஜராஜன்
ஆண்ட புவியும் அன்புத் தலைவிஉன்
காலடி பட்டதால் சிறகுகள் முளைத்து
வானில் பறந்துஉன் வாழ்த்துக்கள் பாடுதாம்
உன்புகழ் உருவை உளத்தால்
வணங்கினேன்.

**தலைவருக்கு:**

தலைவரே, நான் உங்கள்
தலைதடவ மாட்டேன்.
உங்கள் தலை காக்க
எந்தன் தலைகொடுக்கவும்
தயங்க மாட்டேன்.
உலகம்கூறும் எப்பித்தும் இல்லாத
புலவன் உன்னுள் ஏன்
புலமைப்பித்து மட்டும் இணைந்ததய்யா?
தப்பித்தோம், யாம் பிழைத்தோம்
என்று ஓடி
தமிழ்ப் பகைவர்தாம் மறைவார்
உன்னைக் கண்டால்.
முப்பித்து மட்டும் உனக்கு உண்டு;
ஆமாம், முத்தமிழின் பித்தன் நீ;
மூப்பில்லாத முப்பாலின் பித்தன் நீ.
முத்தமிழின் பித்தன் நீ.

பாவேந்தர் தம் முறுக்கேற்றும்
கவிதைகளின் பித்தன் நீயே!
கலப்பில்லா நற்றேனைக்
கடைகள் எல்லாம் தேடிவந்தோம்
இனிமேல் யாம் அலையமாட்டோம்;
உன் நரைத்தேன் இருக்கிறதே?
தேனை நரைத்தேன் என்று சொன்னீர்கள்;
நரை என்றால் தேன் என்று!
எனவே, கலப்பில்லா நற்றேனைக்
கடைகள் எல்லாம் தேடி
அலைய மாட்டோம்.
உன் தலைமை வணங்குகின்றேன்,
வாழ்த்துகின்றேன்.

**மாண்புமிகு கு.ப. கிருஷ்ணர்க்கு:**

உனைச் சுமந்தோடும் உந்து வண்டியும்
தூய பழந்தமிழ் என்னைச் சுமந்து

தமிழ் முழக்கோடு தாவி ஓடுமாம்;
அதனால் உன் பயண வண்டியும்
எங்களுக்குக்
கும்பிடுகின்ற கோயிலானது!
நீ அக்கோயிலில் குடியிருக்கின்ற
தமிழ்நலம் காக்கும் தமிழ்ச் சாமி ஆனாய்!
உலகுள தமிழர்கள் உன் துணிச்சல் கண்டு
உச்சரித்துள்ளனர் உன் பெயர் தன்னையே;
மாண்பமை அமைச்சரே வணங்குகின்றேன்.

**மாண்புமிகு தென்னவர்க்கு:**

முன்னர் பழந்தமிழ் மண்ணை ஆண்ட
மன்னவர் வழியில் மாத்தமிழ் பிழைக்கும்
தேன்தமிழ்ச் செல்வர்
மாண்புடைத்தென்னவர்
திருத்தொண்டிற்கும் என்
கரம் கூப்பினேன்.
அலைகடலென இங்கு
அணி திரண்டிருக்கும்
மதிப்புடை மக்களை - மலர்களை
வணங்கினேன்!
தேசியக் கவிஞர் நாமக்கல் ராமலிங்கம்
பாமரர்க்கும் பண்டிதர்க்கும்
பாடுபடும் தோழர்கட்கும்
தேமதுரச் செந்தமிழ் தித்திக்கப்
படைத்தளித்த
நாமக்கல் கவிஞன் புகழ் உரைப்பேன்; அந்த
நற்கவி சீர் பாட்டில் படம் பிடிப்பேன்;
மாமலைமுன் ஓர்கடுகாய்
மாகவி புகழ்முன் நின்று பாமகள்
துணையுடனே
பாரதப் பெருங்கவியின் பண்புநலம்
அத்தனையும் தொடுப்பேன்;
அந்தப் பாட்டு முதல்வன் பெருமை
வடிப்பேன்!
இருபதாம் நூற்றாண்டு ஈன்ற கவிஞரில்
காந்தியக் கவிமகன், தேசியத் திருமகன்
நாமக்கல் கவி ராமலிங்கனார்,
தன்னேரில்லாத் தனிப்புகழ்க் கவிஞர்.
தமிழை, தமிழரை தமிழினப் பெருமையை
தமிழ்ப் பண்பாட்டை, தம்முயிராகப்
போற்றிப் பாடிய புதுமைக் கவிஞர் அவர்.
தமிழ் இலக்கியம் தலை நிமிர்ந்திடவே,
எண்ணிலாப் படைப்புகள்
இயற்றிய அறிஞர்.
விடுதலை வேள்வியில் விளைந்த கவிஞர்.
போராட்ட வீரராய், புடம்
போட்டெழுந்தவர் அவர்.
உயர்ந்த ஓவியர் ஒப்பிலாப்பாடகர்.
நாவல், சிறுகதை, நாடகம் என்று
எழுதிக் குவித்துநம் இதயம் கவர்ந்தவர்.
தேர்ந்து, தெளிந்த திறனாய்வாளர்!
சொல்லாண்மை மிக்க, மேடைப் பேச்சாளர்!
தேயாத் திறன்மிகு தேசியம் காக்க
ஓயாதுழைத்த உத்தமக் கவிஞர்!
கருணை மாமுனி அண்ணல் காந்தியின்
காந்தீயம் காக்க கண்விழித்து உழைத்தவர்.
விடுதலைக் கவிஞர் பாரதிக்கும்
புரட்சிக் கவிஞர் பாரதிதாசர்க்கும்
கிடைக்காச் சிறப்புயர் கவிமா மன்னரை
தேடி வந்து, திருவடி தொழுதது! ஆம்.
இந்த நாட்டின் இணையிலாக் கவிஞரை
அந்த நாளின் தமிழக அரசு
வருந்தி அழைத்து, வாழ்த்துகள் பொழிந்து
முதல் அரசவைக் கவிஞர் என்று
அரியணை அமர்த்தி, அதன் புகழ் காத்தது.
இந்த மண்ணின் விடுதலைக்காக
சிறையில் பாடிய சிந்திசைக்கவிஞர்க்கு
மற்றொரு பெருமையும் மடியில் விழுந்தது.
கவிஞரில், முதல் மேலவை உறுப்பினர்
என்னும் பதவியை இவர்க்கு அளித்து
முத்தமிழுக்கே முடிசூட்டி மகிழ்ந்தார்,
ஏழைப்பங்காளர் எனும் புகழ்பெற்ற
கர்மவீரர் காமராஜர்!

இந்திய மண்ணின்
இணையிலாக் கவிஞர்க்கு
இன்னொரு சிறப்பும் இணைந்துகொண்டது.
மத்திய அரசின் மாண்புறு பட்டமாம்
பத்மபூஷன் பட்டம் பெற்ற
முதல் தமிழ் இலக்கியக் கவிஞர்
என்னும் சிறப்பே அந்தச் சீர்மிகு சிறப்பாம்!

**மக்கள் ஒவ்வொருவரும் மற்றவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். ஒற்றுமையாக வாழ வேண்டும். மற்றவர்களுக்காகக் கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள். உங்களைக் கடவுள் ஆசீர்வதிப்பார்.**

**—அன்னை தெரசா**

இத்தனைச் சிறப்பும் மொத்தமாய்ப் பெற்ற
முத்தமிழ்க் கவிஞர் இவரேயாவார்.
படித்தவர், பட்டம் பெற்றவர்கள்
பாரத நாட்டில் பெருகி விட்டால்
வேலையில்லாத்திண்டாட்டம் வெடித்து,
நாடு நொடிந்து விடும் என்பதை
அன்றே நன்கு உணர்ந்து
இளைஞர்க்கு அறிவுரை பல உரைத்தார்.
"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்".
'எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ'
என்ற நம் கவிஞர் பொன்னுரையை
இன்றைய இளைஞர்கள் ஏற்றுவிட்டால்
வெற்றிகள் வீடு தேடி வரும்;
விடியலும் நாளை ஓடி வரும்!
விஞ்ஞானத்தால் கொல்லுவதை
வீரர்கள் போரெனச்சொல்லுவதோ?
அஞ்ஞானத்தின் வடிவன்றோ
அணுகுண்டாகிய வெடிகுண்டு?
எனவே,
'ஆயுத பலத்தை நம்பாதே
ஐரோப்பியர் போல் வெம்பாதே'
—என்று தேசிய கவிஞர் தெளிந்துரைத்தார்!
தேவையில்லாத போரை எதிர்த்தார்.
போரிலா உலகம் காண்பதற்கே
புகழ்க்கவி அவர் வழி நாம் நடப்போம்!

அன்றே இந்த ஆண்மைக் கவிஞர்
மோகனூர் தந்த முத்தமிழ்ச் செல்வர்
குழந்தைத் திருமணக் கொடுமையை
எதிர்த்தார்.
கொடிய சிசுக்கொலை, வரதட்சணை
எல்லாம்
பழம்பெரும் நாட்டின் பழிச்செயல் என்றார்.
பழி வரும் தீண்டாமையால் எனப்
பகைத்தார்.
விதவை மணமும், கலப்பு மணமும்
வேண்டும் நாட்டில் யாண்டும் என்றார்!
மதுவிலக்கே வாழ்க்கை நோக்கு என்று
உழைத்தார்.
மறுமலர்ச்சிப் பாதை பல காட்டி
அழைத்தார்.
ஒற்றுமை கெடுத்து, வேற்றுமை விதைக்கும்
உருப்படாச் செயல்களை நாளும்
வெறுத்தார்.
மற்றவர்க்காகவே தன்னைத் தந்து
மகாத்மா வழியில் பழிகள் பொறுத்தார்.
கொடுஞ்சிறை, அவர்நலம் குலைத்தபோதும்
கொள்கை மறவர் குலையாது நெஞ்சைத்
தொடும் பல படைப்புகள் எழுதிக்
குவித்தார்.
தூரிகை மன்னன் வரலாறு படைத்தார்.
நாம் மக்கள் - புழு, பூச்சி, விலங்கு அல்ல.
நாடு, மொழி, இனம் வாழ உழைப்போம்
என்றே நாமக்கல்லாய்த் தேய்ந்த ஏழை
மக்கள்
நலம் நாடி, நாமக்கல் கவிஞர் வாழ்ந்தார்.
மலை முழுங்கி மல்லப்பர்களையும்
நாட்டு மக்களுக்காய் உழைக்கும்
நல்லோர்களையும்
மலை முழுங்கி மல்லப்பர்களையும்
'மலைக் கள்ளன்' கதை மூலம் வடித்துத்
தந்தார்!
என்றும் நம் மனங்களிலே இடம் பிடித்து
வாழுகிற
மலைக் கள்ளன் வேடமிட்ட எம்.ஜி.ஆர்., ஐ
மறந்திடவா முடியும் நாம்?
தமிழர் வாழ்வின் நிலைக்களமாய்
வாழுகின்ற
தமிழ்ப் பண்பாட்டை நிலை நிறுத்தும்
பல புதினம் படைத்தளித்தார்
பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்
பணம் என்ற மோகத்தின் விசை
தீரவேண்டும்.
கூட்டாளி வர்க்கங்கள் குணம் மாற
வேண்டும்.
குற்றவேல் தொழில் என்ற மனம் மாற
வேண்டும்.
வேறுள்ளோர் துன்பங்கள் கண்ணாறக்
கண்டும்
நாட்டோடு சேராத தனிபோக உரிமை
நடவாது இங்கு இனி என்று

**'ஏன்? எதனால்? எப்படி? எதற்காக?' என்ற கேள்விக் குறிகளை நிறுத்திச்சரியான விடை, பகுத்தறிவுக்கு ஏற்ற பதில் கிடைத்த பிறகே எதையும் செய்யவேண்டும்.**

**– இங்கர்சால்**

# வழிகாட்டிகள்



நாட்டு விடுதலைக்காகச் சிறையில் வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப் பட்டவர்கள், மண்டை பிளக்கப் பட்டவர்கள், குடும்பச் சுகத்தை இழந்த வர்கள், தடியடியால் இறந்த குமரன், தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறிகொடுத்த சிதம்பரம் பிள்ளை போன்ற வீரத் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டும். அவர்கள் சிந்திய இரத்தமும், கண்ணீரும் நமது வீர வணக்கத்துக்கு உரியன. அவர்கள் நமக்கு வழிகாட்டிகள்.

நாம் அறிதல் பெருமை -
என்று பாட்டாளி மக்களுக்காய்க்
குரல் நாளும் கொடுத்தார்!
பணத்தாசை மனிதர்களை நிதம் பார்த்துச்
சிரித்தார்!

நாட்டுக்கும் மக்களுக்கும் நாம்
உழைக்காவிட்டால்
நாளை வரும் சமூகம்தான் நமைப்
பழிக்கும் என்றார்.
பாட்டாளர் நல்வாழ்வே தம்வாழ்வாய்
எண்ண
பகட்டறியா நம் கவிஞர் ராமலிங்கர்
வாழ்ந்தார்.
கூட்டுறவால் நாம் உயர்வோம் என்று
குரல் தந்தார்.
குறையில்லா நிறைவாழ்வைக் கண்டு
கவி சென்றார்
தமிழ்நாட்டில் தமிழ் இசையின்
இயக்கங்கள் வெல்லத்
தளராமல் குரல் கொடுத்தார்.
அவரவர் மொழியில் அவரவர் கேட்பதே
இசை எனப்படுவதன் இன்பம் தருவது.
புரியா மொழியில் இசையைப் புகட்டல்
கண்களைக் கட்டி காட்சி காட்டுதல்!

தமிழன் சொந்தத் தாய்மொழிச் சொல்லில்
இசையைக் கேட்க இச்சை கொள்வதே
தமிழ் இசை என்பதன் தத்துவமாகும்.

என்று தமிழ் இசை காக்க
மார் தட்டி நின்றார்!
"தமிழன் என்ற பெருமையோடு
தலை நிமிர்ந்து நில்லடா!
அமிழ்தமென்ற தமிழின் ஓசை
அண்டம் முட்ட உலகெலாம்
அகிலதேச மக்களும் தன்னாசை
கொள்ளச் செய்யடா!"
—என்று ஆணையிட்ட அமர கவியின்
அன்பு வேண்டுகோள் எலாம்
அன்னை நாட்டின்
மக்கள் நாம் ஒன்றுசேர்ந்து
நெஞ்சில் ஏற்றுவோம்.
மானமுள்ள, மதிப்புள்ள மாண்பு
வாழ்க்கை மணந்திடும்
புதிய நாடு ஒன்று காண
விடியல் கீதம் பாடுவோம்!
வானை முட்டும் புகழைத் தொட்டு
வாழ்ந்த வீர மரபினர்
வையம் எங்கும்
வளமை சேர்க்கும் வாய்மை,
மெய்மை வழி செல்வோம்.
தேனில், அமுதில், பாலில்,
கரும்புப் பாகைப் பெய்து செய்தமிழ்
திக்கு எட்டும் பரவ அமைதி உலகம்
படைத்து வெல்லுவோம்.
வாழ்க தேசியக் கவிஞர் நாமக்கல்லார் புகழ்!
வெல்க செந்தமிழ்.
வணக்கம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA 7556.95

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

தமிழரசு





